www.tamilarangam.net


# களத்தில்

"விடுதலைப் போராட்டம் என்பது மக்கள் போராட்டம்; பரந்துபட்ட வெகுசனங்கள் ஒன்று திரண்டு ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சி கொண்டு போராட்டத்தில் பங்களித்தால்தான் எமக்கு வெற்றி நிச்சயம்"

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 துலாம் 23 (06.11.1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p


# அனைத்துலக மக்களின் கவனத்தை ஈர்ந்த 'அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம்'

☆ நாட்டின் தலைவர்களுக்கு கோரிக்கைகள் கையளிப்பு

☆ செய்தியாளர்களிடம் நாட்டின் உண்மைநிலை எடுத்துரைப்பு

**அனைத்துலக நாடுகளிலும் வாழும் தமிழர்கள், அனைத்துலக கவன ஈர்ப்பு வாரத்தையொட்டி (30.10.96 - 05.11.96) பலவிதமான வழிகளில் தாம் வாழும் வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் மக்கள் பிரதிநிதிகள், மற்றும் தொடர்பு சாதனங்களுக்கும் தமிழீழ மக்கள் அவலங்கள் குறித்த உண்மை நிலைமைகளை தெளிவுபடுத்தினர்.**

பிரித்தானியப் பிரதமர், நோர்வேப் பிரதமர் உட்பட பல நாட்டுத் தலைவர்களுக்கு நேரடி மகஜர்கள் கையளிக்கப்பட்டதுடன், அவர்கள் அம் மகஜர் குறித்து கவனம் எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளனர். அத்துடன் பத்திரிகையாளர் மாநாடுகளும் பல நடாத்தப்பட்டுள்ளன. லண்டனில் 01-11-96 அன்று ஈழம் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டுக்கு, எதிர்பார்த்ததை விட அதிகமான முக்கிய செய்தியாளர்கள் கலந்து கொண்டனர். முன்னாள் பி. பி. சிஇன் இலங்கைக்கான செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி, 'ரொய்ட்டர்' செய்தியாளர், 'ஏ.பி' செய்தியாளர், மற்றும் இலண்டன் பத்திரிகையாளர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டோர், தமிழீழத்தில் இருந்து தருவிக்கப்பட்ட ஒளி நாடாக்களையும், புகைப்படங்களையும் பார்த்து உண்மை நிலைகளை யதார்த்தமாக உணர்ந்து கொண்டனர்.

அனைத்துலக கவன ஈர்ப்பு வாரத்தையொட்டி ஈழம் இல்லத்திற்கு 02-11-96 அன்று வருகை தந்திருந்த 'லிபரல் டெமொக்கிரற்' கட்சியைச்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## "தமிழீழ விடுதலைப் போராட்டம் பயங்கரவாதம் அல்ல; அது நீதியானது நியாயமானது"

-பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் சைமன் கியூஸ்



"சிலர் கூறுவதைப் போன்று, தமிழீழ விடுதலைப் போராட்டம் பயங்கரவாதத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை; அது நீதியானது, நியாயமானது என்பதை வெளிப்படையாகவே ஏற்றுக் கொள்கின்றேன்" என, அனைத்துலக கவன ஈர்ப்பு வாரத்தினையொட்டி லண்டன் ஈழம் இல்லத்தில் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொறுப்பாளர் செல்வி மான் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் 'லிபரல் டெமொக்கிரற்' (Libèral Democrat) கட்சியைச் சேர்ந்த சதக்-பேர்மென்சே தொகுதியின் (Southwark and Bermondsey) பிரித்தானியா பாராளுமன்ற உறுப்பினர் சைமன் கியூஸ் (Simon Hughes) அவர்கள் கூறினார்.

18-10-1996 அன்று "தமிழர் மனித உரிமைகள் மையம்" சார்பாக அதன் உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டறியும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## சுவிஸ் கிளைப் பிரதிநிதி முரளிதரன் விடுதலை

கடந்த சித்திரை மாதத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பிரதிநிதி திரு. நடராசா முரளிதரன் அவர்கள் சுவிஸ் காவல் துறையினரால் சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார் என்பது எல்லோரும் அறிந்ததே.

சிறிலங்கா அரசு, வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் எமது விடுதலைப் போருக்கு உதவி செய்வதைப் பொறுக்காது, இதனை நிறுத்துவதற்கு அல்லது முடக்குவதற்கு பல வழிகளில் முயற்சி செய்தது. செய்தும் வருகிறது. இந்த அடிப்படையில் "தமிழ் மக்களிடம் பலவந்தமாக பணம் சேர்க்கிறார்", "வன்முறைகளில்



ஈடுபட்டார்" போன்ற போலிக் குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டு சுவிஸ் காவல் துறையால் கைது செய்யப்பட்டார். இவர் விடுவிக்கப்படும் வரைக்கும் நீதிமன்ற விசாரணைக்காக இவரது வழக்கு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## மாவீரர் லெப்.கேணல் நாதன், பத்திரிகையாளர் கஜனுக்கு அகிலமெங்கும் அஞ்சலிகள்

- நீதிகோரி பிரான்ஸ் தூதரகங்கள் முன் விழிப்புப் போராட்டம்



லெப்.கேணல் நாதன்

தமிழீழத் தேசிய மாவீரர் லெப்.கேணல் நாதன், பத்திரிகையாளர் கஜன் ஆகிய இருவருக்கும் வீர வணக்கக் கூட்டங்களும், அஞ்சலி நிகழ்வுகளும் தமிழர்கள் வாழும் பல நாடுகளிலும் உணர்வு பூர்வமாக நடாத்தப்பட்டு வருகின்றது.

அதேவேளை, நீதியான நேர்மையான துரிதமான விசாரணையை வலியுறுத்தி பிரான்சிய தூதரகங்கள் முன்பாக, தமிழகம் முதல் லண்டன் வரை விழிப்புப் போராட்டங்கள் தமிழ் மக்களால் நடாத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கல்விமான்கள், மனித உரிமை அமைப்புக்களைச் சேர்ந்தோர், பத்திரிகையாளர்கள் போன்ற அரசியல் சார்பற்ற மக்கள், பிரான்சிய தூதரகம் முன் துண்டுப் பிரசுர விழிப்புப் போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

லண்டனில் நடைபெற்ற விழிப்புப் போராட்டத்தின்போது பிரான்சிய தூதுவருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பிரான்சில் நடைபெற்ற விழிப்புப் போராட்டத்தின்போது, வெளிநாடுகளுக்கும் தனது பயங்கரவாதத்தை நீட்டியுள்ள சிறிலங்கா அரசை உலகின் மத்தியில் இனங்காட்டக் கோரியும், இது பற்றி நீதி விசாரணை நடாத்தவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

தொடர்ச்சி 4 ம் பக்கம்...



பத்திரிகையாளர் கஜன்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “வன்னி நோக்கிய இடப்பெயர்வு” உலக சரித்திரத்திலேயே முதல் நிகழ்வு

-தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன்.

**கடந்த ஆகஸ்ட் மாதம் 31ம் நாள் ரொரன்ரோவில் நடைபெற்ற உலகத் தமிழர் இயக்கத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் ஆற்றிய உரையே இங்கு தரப்பட்டுள்ளது.**

எங்களுடைய உள்ளத்திலே சிறிது துக்கம் இருக்கத்தான் செய்கிறது. 1992ஆம் ஆண்டு நான் வந்து உங்கள் முன் உரையாற்றிய போது, அன்றைக்கு அருகே இருந்து எல்லா ஏற்பாடு களையும் செய்த சுரேஷ் இன்று அருகிலே இல்லை என்ற கவலை இருக்கத்தான் செய்கிறது.

உலகத் தமிழர் இயக்கத்தின் பொறுப் பாளனாக, இங்கே புலம்பெயர்ந்து வந்திருக்கும் நம் தமிழ் மக்களின் உற்ற துணைவனாக விளங்கிய அருமைத்தம்பி சுரேஷ், ஏதோ சிலர் தவறுதலாகப் புகார் செய்ததன் விளைவாக இன்று கனேடிய அரசாங்கத்தின் சிறைக்குள்ளே வாடிக் கொண்டிருக்கிறார். அந்தக் குற்றச் சாட்டுகளில் கொஞ்சமும் உண்மை இல்லை என்று நீதிமன்றத்திலே நிரூபிக்க ப்பட்டு சுதந்திர மனிதனாக முன்னிலும் விரைவாகப் பணியாற்றும் தன்மையுடன் இங்கே வருவார் என்பதிலே சந்தேகம் இல்லை.

எனக்கு முன்னால் பேசிய டாக்டர் ராமதாஸ் இங்கு சொன்னது போல, நான் இந்தக் கனேடிய அரசாங்கத்திற்கு மிகப் பணிவான ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். சொந்த மண்ணிலே வாழ்வதற்கே வழியில்லாமல் பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழ் சகோதரர்களும் சகோதரிகளும் இங்கே உங்களை அடைக் கலம் என்று அண்டியபோது அவர் களுக்கு இங்கே இடம் கொடுத்து வாழ்வளித்த கனேடிய மக்களுக்கும் கனேடிய அரசாங்கத்திற்கும் என்றென் றைக்கும் தமிழ் கூறும் நல்லுலகம் தனது நன்றியைத் தெரிவிக்கும்- தெரிவித்துக் கொண்டிருக்கும்.

இந்த நாட்டிலே இவ்வளவு தமிழர்களுக்கு இடம் கொடுத்த உங்களுக்கு எதிராக அல்லது இந்தக் கனேடிய மக்களின் அன்புள்ளத்திற்கு எதிராக எங்களுடைய தமிழ் மக்கள் ஒருபோதும் எத்தகைய செயலையும் மனதால்கூட நினைக்க

உலகத் தமிழர் இயக்கத்தின் பொறுப்பாளனாக, இங்கே புலம் பெயர்ந்து வந்திருக்கும் நம் தமிழ் மக்களின் உற்ற துணை வனாக விளங்கிய அருமைத்தம்பி சுரேஷ், ஏதோ சிலர் தவறுதலாகப் புகார் செய்ததன் விளைவாக இன்று கனேடிய அரசாங்கத்தின் சிறைக் குள்ளே வாடிக் கொண்டிருக்கிறார். அந்தக் குற்றச்சாட்டுகளில் கொஞ்சமும் உண்மை இல்லை என்று நீதிமன்றத்திலே நிரூபிக்கப் பட்டு சுதந்திர மனிதனாக முன்னிலும் விரைவாகப் பணி யாற்றும் தன்மையுடன் இங்கே வருவார் என்பதிலே சந்தேகமில்லை.

மாட்டார்கள் என்ற உறுதியை நான் கனேடிய அரசாங்கத்திற்கு அளிக்கிறேன். தமிழகத்திலே சில வேண்டாத நிலை இருந்தாலும்கூட, எங்களுடைய தமிழ் நாட்டிலேயுள்ள புலம்பெயர்ந்த சகோதர சகோதரிகளுக்கு அளிக்கப்படுகிற அந்த மதிப்பை விட, உதவிகளை விட இங்கே கனேடிய நாட்டிலே சிறப்பாக இந்த அரசாங்கம் அளித்து வருகிறது. இதற்காக உலகெங்கும் வாழுகிற தமிழர் களின் சார்பில் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதே நேரத்தில் நீங்கள் உலகத் தமிழர் இயக்கத்தைப் பற்றியோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றியோ தயவு செய்து உங்களுக்குத் தவறான கருத்து வேண்டி யதில்லை. 1992ஆம் ஆண்டு நான் இங்கு வந்தபோது, அன்றைக்கு தளபதி கிட்டு அவர்கள் என்னை அனுப்பி வைத்தார்கள். இங்கே முக்கியமான ஒரு வேலைக்காக நான் வந்தேன். அன்று கனேடிய அரசாங் கத்தின் அனைத்துக் கட்சிக் குழு ஒன்று இலங்கைக்கு நேரிலே விஜயம் செய்து அந்தப் பிரச்சினையை ஆராய இருக்கிறது என்ற நிலைமையில் அந்தக் குழுவினரைச் சந்தித்து அவர்களிடம் சில விளக்கங்களைத் தருவதற்காக நான் இங்கு வந்திருந்தேன். அவர்களைச் சந்தித்தேன். விளக்கங்களையும் நான் அளித்தேன். அதற்குப் பின்னாலே அந்தக் குழு இலங்கைக்குச் சென்று திரும்பி வருகிறவரையிலே இங்கு இருந்து, வந்த பிற்பாடும் சந்தித்தேன். அன்றைக்குக் கனடா நாடாளுமன்றக் குழு ஏறத்தாள 39 ஆலோசனைகளைக் கனேடிய அரசாங் கத்திற்கு அளித்திருக்கிறது. அவர்கள் அதிலே தெளிவாக, இலங்கையிலே

இந்தச் சூழ்நிலையில், கனடா அரசின் உதவி எங்களுடைய விடுதலைப் போராட்டத்திற்குத் தேவை. எங்களுடைய மக்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கு அவர்கள் உதவ வேண்டும் என எண்ணுகிற நாங்கள் ஒரு போதும் இந்த நாட்டில் எத்தகைய வன்முறைக்கும், அல்லது இந்த நாட்டிற்கு எதிராக அல்லது இந்த மண்ணின் அமைதியைக் குலைப்பதற்கான நடவடிக்கைகளில் எங்கள் மக்கள் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள் என்ற உறுதியை, கனடா அரசிற்கு நான் இங்குள்ள மக்களின் சார்பில் அளிக்க விரும்புகிறேன்.

தமிழர்கள் என்ன நிலையிலே அவதிப் படுகிறார்கள் என்பதைப்பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் உண்மையாக தமிழ் மக்களின் பிரதி நிதிகள் என்ற சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள சிங்கள அரசு தவறுமேயானால், அதிலே கனடா அரசாங்கம் தலையிட வேண்டும். இந்தப் பிரச்சினையை உலக அரங்கிலே எழுப்ப வேண்டும் என்றெல்லாம் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அந்த நாடாளு மன்ற உறுப்பினர்களின் அந்த அறிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஆவணமாகும்.

நான் இங்கே வந்த பிற்பாடுகூட சில நாடாளுமன்ற உறுப்பினர்களை, சில அரசியற் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசியபோது, நான் அதைத் தான் சொன்னேன். இந்தப் பிரச்சினையிலே கனடா அரசு நடுவர் பொறுப்பை ஏற்க வேண்டும். இலங்கைச் சிக்கல் தீர்வதற்குக் கனடா அரசு முன்முயற்சி எடுக்க வேண்டும். அங்கு பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெறுவதற்குக் கனடா அரசு தனது பங்களிப்பினைச் செய்ய வேண்டும் என நான் வற்புறுத்தினேன். இப்போதும் வற்புறுத்துகிறேன்.

உங்கள் வாயிலாகவும் வற்புறுத்த விரும்புகின்றேன். ஆகவே இந்தச் சூழ்நிலையில், கனடா அரசின் உதவி எங்களுடைய விடுதலைப் போராட்டத் திற்குத் தேவை. எங்களுடைய மக்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கு அவர்கள் உதவ வேண்டும் என எண்ணுகிற நாங்கள் ஒரு போதும் இந்த நாட்டில் எத்தகைய வன் முறைக்கும், அல்லது இந்த நாட்டிற்கு எதிராக அல்லது இந்த மண்ணின் அமைதியைக் குலைப்பதற்கான நடவடிக் கைகளில் எங்கள் மக்கள் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள் என்ற உறுதியை, கனடா அரசிற்கு நான் இங்குள்ள மக்களின் சார்பில் அளிக்க விரும்புகிறேன்.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு முக்கியமான காலகட்டத்தை அடைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. யாழ்ப்பாணத்தை நாங்கள் பிடித்து விட்டோம்; யாழ்ப் பாணத்திலே சிங்கக் கொடி கம்பீரமாகப் பறக்கிறது. விடுதலைப் புலிகளை முற்றி லுமாக முறியடித்துவிட்டோம் என் றெல்லாம் கொக்கரித்த சிங்களவர்களின் நிலைமை இன்றைக்கு என்னவாகி இருக்கின்றது. யாழ்ப்பாணத்திலே என்ன காரணத்தினால் விடுதலைப் புலிகள் அப்படி ஒரு நிலைப்பாட்டினை எடுத் தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்க ளாயினும், நான் சிலவற்றைக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். யாழ்ப்பாணத் தைக் கைப்பற்றுவதென்று சிங்கள அரசு முடிவு செய்தபோது, அவர்களுக்குச் சில நோக்கங்கள் இருந்தன. முதலாவது நோக்கம், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி னால், பன்னெடுங்காலமாக, ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலமாக எந்த நகரம் தமிழர்களின் கலாச்சார பண்பாட்டுத் தலை நகரமாகத் திகழ்கின்றதோ, எந்த நகரத் திலே விடுதலைப் புலிகள் காலூன்றி நிலைப்பாடு கொண்டிருக்கிறார்களோ அதைப் பிடிப்பதன் மூலம் புலிகளுக்குச் செல்வாக்கு இல்லை, பலமில்லை, அவர்களை நாங்கள் முறியடித்து விட்டோம் என்று உலகத்திற்குக் காட்டுவது அவர்களது முதலாவது நோக்கம்.

இரண்டாவது நோக்கம், யாழ்ப்பாண த்தைப் பிடித்தவுடன் எந்த மண் புலிகளுக்கு ஊற்றுக் கண்ணாகத் திகழ் கின்றதோ, எந்த மண்ணிலிருந்து புலிகள் சாரை சாரையாகக் கிளம்பி சிங்கள இராணுவத்திற்கெதிராக வீரம் செறிந்த போராட்டத்தில் ஈடுபடுகிறார்களோ அந்த மண்ணைப் பிடித்தவுடன் அங்கேயுள்ள அறிவு ஜீவிகள் எல்லோரையும் அழித்து விடுவதெனச் சிங்கள இராணுவம் திட்டமிட்டது.

நீங்கள் அறிந்திருப்பீர்கள் வங்க தேசத்தின் டாக்காவைக் கைப்பற்றிய பாகிஸ்த்தான் இராணுவம், டாக்கா பல்கலைக் கழகத்தைச் சுற்றி வளைத்து அங்கிருந்த ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்று யார் யார் அந்த டாக்கா பல்கலைக் கழகத்திலிருந்து விடுதலை உணர்விற்குத் தீனி போட்டு வளர்த்தார்களோ அவர்களில் ஒருவரையும் பாகிஸ்த்தான் இராணுவம் விட்டு வைக்க வில்லை. அதே பாணியில், யாழ் பல்கலைக் கழகத்தைச் சுற்றி வளைத்து ஆதிக்கம் செய்ய வேண்டும் என்று அங்கே சிங்கள இராணுவம் திட்ட மிட்டிருந்தது. அடுத்தபடியாக, புலிகளின் ஆயுதத் தொழிற்சாலைகள் எல்லாம் அங்கேதான் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் கைப்பற்றி அழித்துவிட வேண்டும்.

அதைவிட, யாழ்ப்பாணத்தைப் பிடித்த பின்னர் அங்கே துரோகிகளைக் கொண்டு ஒரு மாகாண அரசை நியமிக்க வேண்டும். அந்த மாகாண அரசு, சந்திரிகா அரசு அறிவித்துள்ள அரை குறைத் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதாக அறிவிக்கும். அதன் பின்னால் அந்த மாகாண அரசிற்கும் சந்திரிகா அரசிற்கும் ஒரு உடன்பாடு கையெழுத்திடப்படும். அதன் பின்னர், அதை உலகிற்குக் காட்டி, "பிரச்சினை தீர்ந்து விட்டது. ஈழத் தமிழ் மக்களின் அரசு இந்தத் திட்டத்தை ஏற்றுவிட்டது. விரல்விட்டு எண்ணக்கூடிய சில புலிகள் தான் சுயநலம் காரணமாக எதிர்த்துப் போராடுகிறார்கள். அவர்களை மக்களே நிராகரித்து விட்டார்கள்" என்று உலகின் கண்களுக்குக் காட்டி ஏமாற்ற வேண்டும் என்று திட்டமிட்டுள்ளது. இத்தகைய திட்டங்களோடுதான், சிங்கள இராணுவம் அங்கே புகுந்தது. ஆனால், என்ன நடந்தது?

நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. உலக சரித்திரத்திலேயே இப்படி ஒரு நிகழ்ச்சி இதுவரை நடந்ததில்லை. இனிமேல் நடக்குமா எனவும் சொல்ல முடியாது. பிரபாகரன் அவர்கள் சிறந்த இராணுவ நிபுணர் என்பது மட்டுமல்ல, சிறந்த இராஜதந்திர நிபுணர் என்பதையும் இந்தப் பிரச்சினையிலே நிரூபித்துக் காட்டியுள்ளார்.

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

www.tamilarangam.net



## மரணமற்ற மனிதர்கள்

தேசமெங்கும் ஓடி, தமிழீழத் தேசப் பணிசெய்த உத்தமர்கள் உயிரை, சிறிலங்காவின் சர்வதேசப் பயங்கரவாதம் அழித்தாலும் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட விடுதலைத் தீ தேசமெங்கும் பரவி எரிகையிலே, நாதன் – கஜன் எனும் அத் தேசிய வீரர்களுக்குக் களத்தில் பத்திரிகை தனது வீரவணக்கத்தைத் தெரிவிக்கிறது.

லெப். கேணல் நாதன் - தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப் பொறுப்பாளர். எங்கள் தேசத் தலைவன் பிரபாகரன் தேர்ந்தெடுத்த செயல்வீரன். சொல்லும் செயலும் தமிழீழ விடுதலையாக வாழ்ந்த இளைஞர். முப்பத்து மூன்று வயதுக்குள் சாதனைகள் பல படைத்த சாதனையாளன். பார்வைக்கு எளிமையானவர். பழகுவதற்குப் பண்பானவர் – அன்பானவர். இத்தகைய செயல்வீரர்களை அழிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் விடுதலைச் சக்தியைப் பலவீனப்படுத்தலாம் என்ற கோழைத்தனத்துடன் சிறிலங்கா அரசு, பாரிஸ் நகரில் தனது சர்வதேசப் பயங்கரவாதத்தை அரங்கேற்றி, எங்கள் நாதனின் இன்னுயிரைக் குடித்துள்ளது.

பத்திரிகையாளர் கஜன் - பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு முதல் அனைத்துலகச் செயலகம் ஈறாகப் பணி செய்த சிறந்த செயல் வீரன். கூடவே, கலையும் கவியும் கூடப் பிறந்ததினால் தமிழால் விடுதலைத் தீ மூட்டிய பத்திரிகையாளன். அவனது பேனாவின் மை 'ஈழமுரசு' எனும் வடிவத்தில் ஓசையாகி, புலம் பெயர் தமிழ் நெஞ்சங்களைத் துயில் எழுப்பும் விடுதலை முரசமானது. சிரித்துப் பழகி, சிந்தனையிழந்த மனிதரையும் தமிழீழச் சிந்தனைக்குள் கொண்டு செல்லும் இனிய சுபாவம் படைத்தவன். களத்தில் பத்திரிகைக்குப் பக்கத் துணையாக நின்ற நன்றியை எண்ணிப் பார்க்கின்றோம்.

தமிழீழ விடுதலைக் களத்தில் இவ்விரு மனிதர்களது வாழ்வு என்றும் வளர்ந்து கொண்டே இருக்கும். அவர்களது சிந்தனைகள் – செயல்கள் – வேண்டுகோள்கள் – வேதனையுடன் கூறிய சோதனைக் கதைகள், எல்லாமே தமிழ் மக்களால் வெல்லப்பட வேண்டிய இலக்குகள். இவ் இலக்குகளை நோக்கிய பயணத்தில் அவர்களது உயிர் எம்முடன் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

தமிழீழ விடுதலைக்குப் பணி செய்யும் எவரும் தனிமனிதர் அல்ல. அவர்கள் தமிழீழத் தேசத்தின் சுடர்கள். எங்கள் தேசம் உள்ளவரை அவர்கள் தேசத்துடன் வாழ்பவர்கள். அதனாலேயே மரணமற்ற மனிதர்களைப் பிறப்பிக்கும் அற்புத சக்தி எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உண்டென உலகம் உணர்கின்றது.

இந்த உண்மையினை உணராத சிங்கள அரசு, தனது அரச பயங்கரவாதத்தால் தமிழர்களின் தேகங்களைச் சுட்டு வீழ்த்தி தேச விடுதலையை அழிக்கலாம் எனப் பகற் கனவு காண்கிறது.

ஆயினும், எமது உடன்பிறப்புக்களின் பிரிவுகள் எமது உள்ளங்களை உறைய வைக்கத்தான் செய்கிறது. இந்தப் பிரிவு எனும் துயர் தரும் உறைவு, எமது உள்ளங்களை மேலும் உறுதியடையச் செய்யுமே தவிர தளம்பச் செய்யாது. அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை நாங்கள் சுமப்போம். கொலைவெறிகொண்ட சிறிலங்காவின் சவால்கள் முறியடிக்கப்படும் என்பதனை வரலாறு விரைவில் உணர்த்தும்.

இதேவேளை, விடுதலைப் புலிகளை அழித்துவிட்டோம் என்றவர்கள் எதிர்கொண்ட – எதிர்கொள்ளும் இராணுவ அழிவுகளுக்குப் பழிவாங்கும் நோக்கில், தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசு இன்று கட்டவிழ்த்து விட்டுள்ள பயங்கரவாதச் செயல்களோ சொல்லில் அடங்காதவை.

ஆக்கிரமிக்கப்பட்ட யாழ். கைதடியில், கிருஸ்சாந்தியையும் அவரின் குடும்பத்தையும் குரூரமாகக் கொன்ற செயல், சிறிலங்காப் படையினரின் பயங்கரவாதங்களுக்கு முன்உதாரணமாக நிற்கின்றது. "தனது குடிமக்கள்" என்று கூறிக்கொண்டு அம் மக்களை முற்றாக அழிக்கும் நோக்குக் கொண்ட சிறிலங்காவின் ஆட்சிக்குள் இருக்க விரும்பாத தமிழ் மக்கள், தமது தாயகத்தில் நிம்மதியாக வாழ நடத்தும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அனைத்துலகம் அங்கீகரிக்க வேண்டியது அவசியமாகின்றது. இதனைப் பாராமுகமாக இருத்தல், இவ்வாறான இனப்படுகொலைகளுக்குத் துணைபோகும் செயலாகவே இருக்க முடியும்.

இச் செயல்களைக் கண்டு உள்ளம் நொந்த புலம் பெயர் தமிழர்கள் "மறந்ததோ வையம் மறத்தமிழ் இனத்தை" எனும் தலைப்பில் அறிமுகப்படுத்திய அனைத்துலக கவன ஈர்ப்பு வாரச்செயற்பாடுகள், எதிர்பார்த்ததைவிட பலத்த ஆதரவைச் சர்வதேசப் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சர்வதேசச் செய்தியாளர்கள், ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் மட்டத்தில் பெற்றுள்ளது. ஐ. நா செயலருக்கும் இது தொடர்பான அஞ்சல் அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன.

இச்செயற்பாடுகளில் எல்லாம், நாதனும் – கஜனும் தோற்றுவித்த விழிப்புணர்வுகளும் உணரப்படுகின்றது. அவர்கள் காட்டிய பாதையில் தேசப் பணியை அதிகரித்து, தேச விடுதலையை விரைவாக்குவதே எமது மாவீரர்களுக்குப் புலம் பெயர் தமிழ் மக்கள் செய்யும் நிறைவான வீரவணக்கமாகும். ✷

## 10,000கும் மேற்பட்ட தமிழ்ப் பயணிகள் பலவந்தமாக அகதி முகாம்களில் அடைப்பு

- படையினர்க்கு இரத்ததானம் வழங்க நிர்ப்பந்திப்பு
- பாதுகாப்பு நிதிக்கு 3,000 ரூபா கொடுக்குமாறு வற்புறுத்தல்

வன்னியில் இருந்து கொழும்புக்கும் பிற பகுதிகளுக்கும் செல்லவெனப் பயணிகளாக வந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பயணிகள், சிறிலங்கா இராணுவத்தால் கட்டாய அகதி முகாம்களுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இப்பயணிகளுக்கு அகதிகள் என்ற நாமமும் கொடுக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசின் தமிழ் ஊழியர்கள் கூட இந் நிலைக்கு ஆளாகியுள்ளனர். இவ்விதம் அடைக்கப்பட்ட மக்களின் சுகாதார –மருத்துவ வசதிகள் மிக மோசமான நிலையில் இருப்பதால், தொற்று நோய்கள் விரைவாகப் பரவக் கூடிய அறிகுறிகள் காணப்படுகின்றன.

வவுனியாவிலுள்ள பாடசாலைகளிலும் மக்கள் பலவந்தமாகத் தங்கவைக்கப்பட்டு அங்கு இராணுவ முகாம்களும் நிறுவப்பட்டுள்ளன. தம்மை கொழும்பு செல்ல அல்லது வன்னிக்குத் திரும்பிச் செல்லவாவது அனுமதிக்கும்படி அங்குள்ள மக்கள் கோரி வருகின்றபோதும், இதனை இராணுவம் மறுத்து வருகின்றது.

இருப்பினும், அங்கிருந்து தப்பி சுமார் 250 மக்கள் மீளவும் வன்னிக்குத் தப்பிச் சென்றுள்ளனர். இவர்கள் அங்கு நடக்கும் கொடுமைகளை விபரிக்கையில், சிறிலங்கா காவல்துறையினர், 'பாதுகாப்பு நிதி' எனும் பெயரில் கப்பம் கேட்பதாயும் 3000 ரூபா தந்தால் அனுதாபத்தின் பேரில் விடுவிக்கலாம் என்றும் கூறிவருகின்றனர். சந்திரிகாவின் 'வெண் தாமரை' இயக்கத்திற்கென முகாம்களில் உள்ள பெண்களின் நகைகளும் பறிக்கப்படுகிறது. போரில் காயமடையும் இராணுவத்தினருக்கு, இரத்தம் வழங்குமாறும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவ்வாறு பலவந்தமாக மூன்று இளைஞர்களிடம் இருந்து அதிக இரத்தத்தை எடுத்ததினால் அவர்கள் மரணமடைந்துள்ளதாயும் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில், தாண்டிக்குளம் சோதனைச் சாவடி ஊடாகப் பயணம் செய்யலாம் என இராணுவம் விடுத்த அறிவிப்பை நம்பிப் புறப்பட்ட மக்களே, முகாம்களில் அதிகமாக உள்ளனர் எனவும், அங்குள்ள மக்களிடம் தமிழர்கள் இராணுவத்தில் இணைந்தால் எவ்வித பிரச்சினைக்கும் இடமில்லை, பல வசதிகளை அனுபவிக்கலாம் என்று பல துண்டுப் பிரசுரங்களும் முகாம்களில் விநியோகிக்கப்படுவதாயும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க, பார்வைக்குத் தோற்றமான பல இளைஞர்களும், யுவதிகளும் 'விசாரணை' எனும் பெயரில் வேறு முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டதாயும், அவர்களின் பெற்றோர், "அவர்கள் அப்பாவிகள்; அவர்களை விட்டுவிடுங்கள்" என்று கத்திக் குளறிய போதும் படையினர் கூட்டிச் சென்றுள்ளனர். கொண்டு செல்லப்பட்டவர்கள் இன்னமும் விடுவிக்கப் படாததால், அவர்களின் நிலை குறித்து உறவினர்களும் பெற்றோர்களும் பெரும் துயரத்துடன் இருப்பதாகவும் கூறினர். ✷

## திருமலை துறைமுகத்தில் பீரங்கிப் படகு மூழ்கடிப்பு

சிறிலங்காக் கடற்படையின் கூர்மையான கண்காணிப்புக்கும், விசேட பாதுகாப்புக்கும் உட்பட்ட திருமலைத் துறைமுகப் பகுதியில், கடந்த 25.10.96 அன்றிரவு கடற்படையின் 'டோரா' பீரங்கிப் படகு கடற் கரும்புலித் தாக்குதலால் மூழ்கடிக்கப்பட்டது. திருமலை துறைமுக வாயில் பகுதியில் இத் துணிகரத் தாக்குதல் நடத்தப்பட்டது. தொடர்ந்து கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் நடைபெற்ற கடற் சமரில், மேலும் ஒரு பீரங்கிப் படகு கடும் சேதமடைந்தது.

கடந்த மாதம் 20ஆம் திகதி சுண்டிக்குளத்தில் கடற்புலிகளின் 'றேடார்' நிலையத்தை அழிக்க, கடற்படை எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்ட ஒருவார இடைவெளியில் நடாத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் இது வாகும். இவ்விரு தாக்குதலிலும் கடற்படை பலத்த இழப்புக்களைச் சந்தித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் கடற்கரும்புலித் தாக்குதலில் வீரச் சாவடைந்த கடற் கரும்புலிகள்:

மேஜர் நளினன் (தெய்வேந்திரன் யோகேஸ்வரன், மூதூர், திருமலை)

கப்டன் ஜெயராஜ் (கந்தசாமி கோபாலகிருஸ்ணன், காரைநகர், யாழ்.)

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். ✷

## கைதுசெய்யப்பட்ட 11 பேரில் மூவர் மட்டும் விடுவிப்பு

அண்மையில் சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கிளிநொச்சி நோக்கிய இராணுவ நடவடிக்கையின் போது, 11 பொதுமக்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் தற்போது மூவர் மட்டும், பலத்த சித்திரவதைக்கும் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 11 பேரின் விபரம் பின்வருமாறு:

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பரந்தனில் வசிக்கும் கனகசபை நாகரட்ணம் (56), இவரின் மனைவி சகுந்தலா நாகரட்ணம் (46), இவர்களின் பிள்ளைகள் அபிநயன் (16), சஞ்சயன் (14), நிரூபா (12), பிருந்தா (11)

இவர்களுடன் கிளிநொச்சிப் பகுதியில் கைது செய்யப்பட்ட, தம்பிராசா கருணாமூர்த்தி (35), வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் (52), கே. கனகசுந்தரம் (65), தம்பிராசா குணநிதி (35), செல்வம் பொன்னம்பலம் (65) ✷

www.tamilarangam.net



# கைதடி இராணுவத்தினரால் நால்வர் படுகொலை

## ✳ சடலங்கள் கொழும்பு சென்றது
## ✳ பள்ளிக்கூட மாணவிகளை கைதாக்குவதில் புதிய உத்தி

சிறிலங்கா இராணுவத்தினர், யாழ். குடாநாட்டினுள் மக்கள் மீது நடாத்திவரும் இனவெறிச் செயல்களும் காரணமற்ற கைது களும் வகை தொகையின்றி அதிகரித்து வருகின்றன. குறிப்பாக இளம் பெண்கள் மீதான வெறித்தனமான பாலியல் வன்முறைகள், சிறப்புக் குற்றச் செயல்களாக இடம்பெறுகின்றன. அத்துடன், இதனை மூடி மறைப்பதற்காகவும் இனங் காண்பதைத் தடுப்ப தற்காகவும், இவ்வாறு பாலியல் வெறியாட்டத்திற்கு உள்ளாகும் பெண்கள் படுகொலை செய்யப்பட்டும் வருகின்றனர்.

### கிருசாந்தி குடும்பம் படுகொலை

கடந்த புரட்டாதி மாதம் 7ஆம் திகதி மதியம் ஒரு மணியளவில், க. பொ. த உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த கிருசாந்தி குமார சாமி கைதடி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

மகள் பாடசாலையிலிருந்து திரும்பி வராததைக் கண்டு குழப்பமுற்ற தாயார் ராசம்மாவும் கிருசாந்தியின் சகோதரர் பிரணவனும் பக்கத்து வீட்டு கிருபாகரன் சிதம்பரமும் கைதடி இராணுவ முகாமுக்கு விசாரிக்க வெனச் சென்றனர். கிருசாந்தி குறித்து தகவல் எதுவும் தெரியாது என மறுத்த இராணுவத்தினர், விசாரிக்கச் சென்ற மூவரது கைகளையும் கயிறுகளால் கட்டி ஓர் அறைக்குள் தள்ளினர். பின்னேரம் முதல் இரவு 10 மணிவரை இவர்களை அடைத்து வைத்த இராணுவத்தினர், இரவு 10 மணியளவில் இம்மூவரையும் அவர்களைக் கட்டிய கயிறுகளினாலேயே கழுத்தை நெரித்துப் படுகொலை செய்து, சடலங்களைச் செம்மணி மயானத்தின் சாம்பல் மேட்டில் புதைத்துள்ளனர். பின்னர் இரவு 11 மணியளவில் கிருசாந்தியை, வெறிகொண்ட சிங்களச் சிப்பாய்கள் கூட்டாக பாலியல் வன்முறைக்குள்ளாக்கியுள்ளனர். இதில் இராணுவத்தினர், பொலிசார் உட்பட 11 பேர் சம்பந்தப் பட்டுள்ளனர். இதன் பின்னர் அவ் இளம் பெண்ணைக் குரூரமான முறையில் கொன்று, அவரையும் செம்மணியின் சாம்பல்மேட்டில் புதைத்து ள்ளனர்.

சாம்பல்மேட்டின் ஆழமின்மையால், மிகச் சிதைந்த நிலையில் கிடந்த இந்தச் சடலங்கள் குறித்த 'நால்வர் கொலைகள்' பற்றிய உண்மைகள் வெளிவரத் தொடங்கியது. அதனால் விசாரணை என்ற பெயரில் நான்கு சடலங்களும் விசேட விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகள் முடிந்த கையுடன் கொழும்பிலேயே தகனம் செய்யப்பட்டுள்ளது.

### கைசெய்வதில் புதுவழி

பள்ளி மாணவிகளைச் சோதனைச் சாவடிகளில் வைத்து கைதாக்குவதற்கு, இராணுவத்தினர் புதிய உத்திகளையும் கையாண்டு வருகின்றனர். சோதனைகளின் போது மாணவிகளின் புத்தகப் பைகளுக்குள் தாமே தடயப் பொருட்களைச் சாட்சிப் பொருட்களாக உருவாக்கி, தமக்கு விருப்பமான மாணவிகளைக் கைதாக்கும் நரித்தனமான தந்திர முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

சமீபத்தில், சோதனைச் சாவடியைத் தாண்டுவதற்கு வரிசையில் நின்ற மாணவி ஒருவரின் புத்தகப் பையினுள் சிப்பாய் ஒருவன், கைக்குண்டொன்றை தானே புகுத்தியுள்ளான். தனது புத்தகப் பையைத் திறந்த அம் மாணவி திடுக்கிட்டுப்போய் பிரமை பிடித்த நிலையில் நிற்கையில், "பயங்கரவாதி" எனக்கூறி அவரை அந்தச் சிப்பாய் கைதாக்க முயன்றுள்ளான்.

ஆயினும், இந்தச் செயலை வரிசையில் நிற்கையில் கூர்மையாக அவதானித்த பொதுமக்கள் பலர் கூச்சலிட்டு, இராணுவத்தினரின் கபடச் செயலை வெளிப்படுத்தியதினால் கையும் களவுமாகப் பிடிபட்ட சிப்பாய், அசடு வழிய "இது பகிடிக்கு" எனக்கூறி தப்பித்துள்ளான் எனத் தெரிய வருகிறது.

### யாழ். வர்த்தகருக்கும் இதேகதி

யாழ். லிங்கம் குளிர்பான நிலையத்துள் இரண்டு கைக்குண்டுகளைத் தாமே எடுத்து வைத்த சிறிலங்காப் படையினர், அதன் உரிமை யாளரையும் 12 ஊழியர்களையும் ஆவணி 23ஆம் திகதி கைதாக்கி, தற்போது கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் 'பயங்கரவாதிகள்' எனப் பெயர் சூட்டித் தடுத்து வைத்து ள்ளனர்.

### மாணவர்கள் பகிஸ்கரிப்பு

இது இவ்வாறிருக்க, யாழ். சுண்டுக்குளி மாணவி கிரு சாந்திக்கு ஏற்பட்ட பயங்கரமான முடிவை அடுத்து, நீதியான விசாரணை மூலம் சம்பந் தப்பட்ட அந்த இராணுவ மிருகங்களை கடுமையான தண்டனைக்குள்ளாக்கும்படியும், மாணவர்கள், ஆசிரியர்கள் இராணுவத்தினரால் துன்புறுத்தப்படுவதை உடனடியாக நிறுத்தக் கோரியும் யாழ். பாடசாலை மாணவர்கள் பகிஸ்கரிப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். ✳

## அனைத்துலக மக்களின் ...

சேர்ந்த பிரித்தானியா பாராளுமன்ற உறுப்பினர் 'சைமன் ஹியூஸ்' அவர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டம் நியாயமானது – நீதியானது என்பதை வெளிப்ப டையாக எடுத்துக் கூறியதோடு, அப்போராட்டத்தின் வெற்றிக்காக உழைக்கப் போவதாகவும் உறுதியளித்திருந்தமை குறிப்பி டத்தக்கது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு, பல்லாயிரக் கணக்கான அஞ்சல் அட்டைகள் கவன ஈர்ப்பு வாரத்தையொட்டி அனுப்பப்பட்டுள்ளன. அவ்வா றான அஞ்சல் அட்டைகளைத் தொடர்ந்து அனுப்பவும் முய ற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பா, கனடா, அவு ஸ்திரேலியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் விழிப்புப் போ ராட்டங்கள், உண்ணா நோன்புகள், ஆலய வழிபாடுகள், கலாச்சார ஒன்று கூடல்கள் என்பவற்றினூடாக தமிழீழத்தில் சிறிலங்கா அரசின் ஒடுக்கு முறையை எதிர்கொள்ளும் எமது மக்களின் அவலங்கள், அனைத்துலக மக்களின் கவனங்களுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ✳

## சுவிஸ் கிளைப் பிரதிநிதி ...

எடுக்கப்படவில்லை. இக் குற்றச்சாட்டுக்களுக்கு எவ்வித சாட்சியங்களோ ஆதாரங்களோ இல்லாத நிலையில் 30.10.96 அன்று திரு. முரளிதரன் அவர்கள் திடீரென விடு விக்கப்பட்டுள்ளார்.

விடுவிக்கப்பட்ட அன்று, ஐக்கிய நாடுகள் சபை முன்றலில், கவன ஈர்ப்பு வார உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு, அங்கு சிறப்புரை ஆற்றிய முரளிதரன் அவர்கள், தான் என்ன காரணத்திற்காக விடுவிக் கப்பட்டேன் என்பது பற்றி எதுவும் தன்னிடம் சொல்லப்பட வில்லை என்றும், அத்துடன் தனது வழக்கறிஞருக்குக் கூட இதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இவரை விடுவிக்கக் கோரி சுவிசில் வாழும் தமிழ் மக்களும் தேவாலய அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் போன்றவையும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. ✳

## மாவீரர் லெப்.கேணல் நாதன்...

பிரான்சிய பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர் ஒருவர் படுகொலைக்கு உள்ளானதைக் குறித்து அதிருப்தி தெரிவித்து பிரான்சிய அரசிற்கு கடிதங்கள் எழுதியுள்ளதுடன் நீதி விசார ணை கோரியும் வருகி ன்றனர். பிரான்சில் அதிகள வில் விற்பனையாகும் பிரபல பத்திரிகை யான லூ மொந்த் (Le Monde) இப் படுகொலை களைக் கடுமையாகக் கண்டி த்ததுடன், இப்படு கொலைக்கும் சிறிலங்கா அர சிற்கும் நிச்சயமாக நேரடியான தொடர்பு கள் உண்டு எனவும் தெரிவித்துள்ளது. ✳

## தமிழீழ விடுதலைப் போராட்டம்...

அலுவலகத்தில் சந்தித்தபோது, சிறிலங்காப் படைகளின் ஆக்கிர மிப்புக்குட்பட்டுள்ள தமிழ் மக்கள், படும் அவலங்கள் விரிவாக எடுத்துக் கூறப் பட்டது. தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் அரச படைகளின் சுற்றி வளைப்புக்கள், நியாயமற்ற கைதுகள், சித்திரவதைகள், ஆட்கள் காணாமல் போதல், காணாமல் போவோர் – கைது செய்யப்படுவோர் மர்மமாகக் கொலை செய்யப்பட்டு வீசப்ப டுதல், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், விமானக் குண்டு வீச்சுக்கள், ஏவுகணைத் தாக்கு தல்கள் போன்ற மனித உரிமை மீறல்கள் பற்றி விளக்கப் பட்டதோடு, இதற்கு எதிராகக் குரல் கொடுக்கும்படியும் கேட்கப் பட்டது. அத்துடன், வெளி நாட்டுச் செய்தியாளர்கள் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதி களுக்குச் சுதந்திரமாகச் செல்வ தற்கும் உண்மை நிலைகளை அறிவதற்கும் அதனை உலக நாடுகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் சிறிலங்கா அரசால் போடப் பட்டுள்ள தடைகள், சர்வதேச சட்டங்களை மீறிய செயல்கள் எனச் சுட்டிக் காட்டப்பட்டதோடு, இந்நிலையைப் போக்கக் குரல் கொடுக்கும்படியும் கேட்கப் பட்டது. இராணுவ ஆக்கிர மிப்பினால் விரட்டப்பட்டு வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம்பெயர்ந்துள்ள 2 லட்சத் திற்கும் மேற்பட்ட மக்கள் படும் அவலங்கள் எடுத்துக் கூறப் பட்டதோடு, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை எடுத்துச் செல வதற்கு, சிறிலங்கா அரசு விதித்த தடைகளை உடனடி யாக அகற்றுவதற்கு ஏற்ற அழுத்தங்களைச் செய்யுமாறும் இச் சந்திப்பில் கேட்கப்பட்டது. தமிழர் மனித உரிமைகள் மையத்தின் இத்தகைய வேண்டு தல்களைக் கவனமாகச் செவி மடுத்த திரு. சைமன் ஹியூஸ் பா.உ. அவர்கள்,

(1) தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களைக் கண்டிப் பதோடு, அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கான முயற்சி களை மேலும் தீவிரப்படுத்து வதாகவும்,

(2) தமிழர் மனித உரிமைகள் மையத்துடன் இணைந்து ஆக்க பூர்வமான முறையில் செயற்படுவதாகவும்

(3) தமிழ் மக்கள் எதிர் நோக்கிய பாரிய இடம் பெயர்வின் ஓராண்டு நிறை வையொட்டி பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அனைத்துலக கவன ஈர்ப்பு வாரத்தின் ஒரு நாளில் ஈழம் இல்லத்திற்கு வருகை தந்து, தமிழ் மக்களை நேரில் சந்திப்பதாகவும் வாக்குறுதி அளித்திருந்தார்.

இச் சந்திப்பின் பிரகாரம், 02-11-1996 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் ஈழம் இல்லத்திற்கு வருகை தந்தி ருந்த திரு. சைமன் ஹியூஸ் பா. உ அவர்களை, ஈழம் இல்லத்தைச் சேர்ந்த தொண்டர்களும் அங்கு கூடி இருந்த மக்களும் மலர்மாலை போட்டு வரவேற்றனர். ஈழம் இல் லத்தைச் சுற்றிக் காண்பித்த போது அங்கு செயற்பட்டுவரும்,

(1) மனித உரிமைகள் மையம்

(2) தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

(3) தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(4) செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு நிலையம்

(5) தமிழ் மகளிர் அமைப்பு

ஆகிய சகல நிர்வாகப் பீடங்களினதும் வேலைத் திட்டங்களைப் பற்றியும் அவரிடம் விளக்கப்பட்டது.

(அடுத்த இதழில் முடிவுறும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லைத்தீவு இராணுவத் தளம்: வடகரையின் வாளேந்திய சிங்கம்!

தமிழர் தாயகக் கோற்பாட்டின் 'உயிர் மையம்' முல்லை மாவட்டத்திலேயே உள்ளது.

இதனால் 'வாளேந்திய சிங்கத்தின் வெட்டிலக்கு' முல்லை மாவட்ட மேயாகும்.

சிங்களக் குடியேற்றங்களை நிறுவி - இராணுவ முகாம்களை அமைத்து, முல்லைத்தீவு நிலத்தைச் சிங்கள மயமாக்குவதன் மூலம், வடக்குக் கிழக்கிற்கு இடையே ஒரு நிரந்தர தடுப்புச்சுவரை எழுப்பி விடுதல், சிங்களப் பேரினவாதத்தின் திட்டமாகும்.

இந்தவகையில், முல்லைத்தீவு இராணுவத் தளம், மணலாற்றுச் சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரம்.

அத்துடன், வடபுலக்கடலின் நுழை வாசலில் முல்லைத்தீவு அமைந்துள்ளது. இதுகாரணமாக படையினரின் கப்பற் போக்குவரத்து விடயத்தில் முல்லைத் தீவுத் தளம் ஒரு 'காவற்கோபுரம்.'

இதேவேளை, வடக்குக்கிழக்குப் பிராந்தியக் கடல்களில், கடற்புலிகளின் நகர்திறனைத் தடுக்க முயலும் சாட்டைபோலவும் முல்லை இராணுவத்தளம் செயற்பட்டது. இந்தளவுக்கு அரசியல் - இராணுவ ரீதியில் முல்லைத்தீவுப் படைத்தளம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலையமாகும்.

மூன்றாம்பிறை வடிவத்தில் நந்திக்கடல் நீரேரி முல்லைத்தீவு இராணுவத்தளத்தை அரண்செய்துள்ளது. அதன் மிஞ்சிய பகுதியைப் பெருங்கடல் பொத்தி மூடிவைத்திருக்கின்றது.

ஒட்டுமொத்தத்தில், ஆமையின் மேல்ஓடு கீழ்ஓடு போல வங்கக்கடலும் நந்திக்கடல் நீரேரியும் முல்லைப் படைத்தளத்தின் காப்புக் கவசங்கள்.

தளத்தின் தென்புறப் பகுதியில் மட்டும் ஒரு தரைவாசல் இருந்தது. அதுவும் ஒரு படையணி ஊடுருவிச் செல்ல முடியாத அளவுக்குச் சதுப்புநிலத்தாலும் வெட்டவெளிகளாலும் அரண் செய்யப்பட்டுக் கிடந்தது.

தளத்தின் வடமேற்குப் பகுதியான 'வட்டுவாகல்' பாலத்திலிருந்து தளத்தின் தென்கிழக்குப் பகுதியான 'சிலாவத்தை' வரையிலான தூரம் ஏறக்குறைய மூன்று மைல் நீளமாகும். அதேவேளை, பெருங்கடலில் இருந்து நந்திக்கடல் நீரேரிவரை, ஏறக்குறைய ஒன்று ஒன்றரை மைல் தூர அகலத்தையும் கொண்டதாக முல்லைத்தளம் அமைந்திருந்தது. அதாவது சுமார் ஐந்து சதுரமைல் பரப்பளவில் இந்தப்படைத்தளம் அமைந்திருந்தது.

1968 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் முதன்முதலில் ஒரு சிங்கள இராணுவ முகாம் ஏற்படுத்தப்பட்டது.

அதேவேளை, நந்திக்கடல் நீரேரிக்கும் முல்லைப் படைத்தளத்திலுள்ள பழைய இராணுவ முகாமிற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு 'விமான ஓடுபாதை' கட்டப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

"ஏ. வண் பாதுகாப்பைக் கொண்டிருந்த முல்லை இராணுவத்தளம் புலிகளின் ஏ. வண் தாக்குதலால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது."


ஆரம்பத்தில் ஒரு சிறிய நிலப்பரப்பில் இருந்த இந்த இராணுவமுகாம், பின்னர் படிப்படியாக விரிவாக்கம் பெற்றது. 'இரண்டாம் ஈழப்போரின்' ஆரம்பத்துடன் இந்த முகாம் பெருமெடுப்பில் விஸ்தரிக்கப்பட்டு ஒரு இராணுவத்தளம் என்ற, தற்போதைய பாரிய வடிவத்தை எடுத்தது.

தளப்பிராந்தியத்தின் பூகோள அமைப்பு அதன் பாதுகாப்பிற்குப் பெரிதும் துணை நின்றது. பெருங்கடல் – நீரேரி – வெட்டவெளிகள் – சதுப்புநிலங்கள் என்பன, புலிவீரர்களின் ஊடுருவலுக்கு அல்லது படை நடாத்தலுக்குத் தடையாக இருந்தன.

இந்த இயற்கைப் பாதுகாப்புடன் – தளத்தின் பாதுகாப்பை அதிகப்படுத்தும் வகையில், மேலும் பல தற்காப்பு ஏற்பாடுகளைப் படையினர் ஏற்படுத்தினர்.

தளப்பகுதியைச் சுற்றி மண் அணையுடன் கூடிய ஒரு தடுப்புவேலி இடப்பட்டிருந்தது. தளப்பிராந்தியத்தைச் சூழ இருந்த இயற்கைப் பாதுகாப்பிற்கு அடுத்ததாக, படையினர் இட்ட முதலாவது சுற்றுப் பாதுகாப்பு ஏற்பாடு அது. இந்தத் தடுப்புவேலி சிலிப்பர்க்கட்டைகள், மண்சாக்குகள், மரக்குற்றிகள் மற்றும் கொங்கிறீற் கற்கள் போன்றவற்றால் அமைக்கப்பட்டிருந்தது. இதேவேளை, தளத்திற்கு வெளிப்புறத்தில் மறைந்திருந்தபடி தளத்தின் உட்புறத்தில் என்ன நடக்கின்றது – என்ன இருக்கின்றது – என்பதைப் புலிகள் கண்டுகொள்ளாதவாறு, தடுப்புவேலி முழுவதும் பனைஓலைகளாலும் தகரங்களாலும் மறைக்கப்பட்டிருந்தது.

இந்த வெளிப்புறவேலி அரணிலிருந்து 30 அல்லது 40 மீற்றர் நீளப் பகுதிகளிலுள்ள பற்றைகள், கட்டடங்கள் அகற்றப்பட்டு வெட்டவெளியாக வைக்கப்பட்டிருந்தன. வேலி அரணை அண்மிக்க முனையும் எவரையும் காவற் கடமையிலுள்ள படையினர் மிகச் சுலபமாகக் காணும் வகையில் அந்த ஏற்பாடு இருந்தது. இந்தப்பகுதி மிதிவெடிகளாலும் 'கிளைமோர்' கண்ணிகளாலும் நிரப்பப்பட்டிருந்தது. சில இடங்களில் நிலத்திலிருந்து அரைஅடி உயரத்தில் முட்கம்பிப் பாத்திகளும் அமைக்கப்பட்டுக்கிடந்தன. இது, அனைத்து வகை ஊர்ந்துசெல்லும் முறைகளையும் தடுத்துவிடும்.




மூன்றாம்பிறை வடிவத்தில் நந்திக்கடல் நீரேரி முல்லைத்தீவு இராணுவத்தளத்தை அரண் செய்துள்ளது. அதன் மிஞ்சிய பகுதியைப் பெருங்கடல் பொத்தி மூடிவைத்திருக்கின்றது.
ஒட்டுமொத்தத்தில், ஆமையின் மேல்ஓடு கீழ்ஓடு போல வங்கக்கடலும் நந்திக்கடல் நீரேரியும் முல்லைப் படைத்தளத்தின் காப்புக் கவசங்கள்.

இந்தத் தடுப்புவேலி எங்கும் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுக் கிடந்தன. அவை இரவைப் பகலாக்கின. இந்த மின்குமிழ் ஒளியையும் மீறி, படையினருக்கு ஏதாவது சந்தேகம் ஏற்படுமாயின், அதைப்போக்குவதற்கு வசதியாகச் சக்திவாய்ந்த 'தேடொளி' (Search Light) வேலி அரண்களில் பொருத்தப்பட்டுக் கிடந்தன.

வெளிப்பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தாண்டி புலிகள் உள்நுழைந்தாலும், தளத்தின் மையப்பகுதியைச் சென்றடையவிடாது தடுக்கும்வகையில் தளத்தின் உள்ளேயும் பல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வெளிப்புற தடுப்புவேலிப் பாதுகாப்பு ஏற்பாட்டைப்போல, உள்ளேயும் மூன்று நான்கு வலயங்களாகத் தடுப்பேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதில் ஒரு வலயத்தில் நூற்றுக்கணக்கான வாகனக்கண்ணிகள் புதைக்கப் பட்டிருந்தன. தளத்தின் உள்ளேயே வாகனக்கண்ணிகளைப் புதைக்கும் அளவுக்கு தளத்தின் பாதுகாப்பு இறுக்கப்பட்டிருந்தது. அத்துடன், தளப்பகுதியில் இருந்த ஒவ்வொரு வீடும் ஒவ்வொருகட்டடமும் படையினரின் காவல் நிலைகளாகவே இருந்தன. இவை தவிர, தளத்தின் மையப்பகுதியில் இருந்த

தொடர்ச்சி 6ம் பக்கம்...

www.tamilarangam.net



# முல்லைத்தீவு இராணுவ....

'ஆட்டிலறி' ஏவுதளமும் பிரதான முகாமின் தலைமையகமும் வேலிமேல் வேலியிடப்பட்டு அணுகமுடியாத அதிஉயர் பாதுகாப்புடன் வைக்கப் பட்டிருந்தன.

தளப்பிராந்தியத்திற்கு இயற்கை கொடுத்த பாதுகாப்புடனும், தளத்தினுள் தாம் வடிவமே இதுவாகும்.

இந்தளவுக்கு முல்லைத்தீவுத் தளத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. "ஏ–வண்" (A-One) தரத்தில் முல்லைத்தளப் பாதுகாப்பு இருந்ததாக கொழும்பில் இராணுவவட்டாரங்கள் தெரிவித்திருந்தமை இங்கு

**சிங்களக் குடியேற்றங்களை நிறுவி - இராணுவ முகாம்களை அமைத்து, முல்லைத்தீவு நிலத்தைச் சிங்கள மயமாக்குவதன் மூலம், வடக்குக் கிழக்கிற்கு இடையே ஒரு நிரந்தர தடுப்புச்சுவரை எழுப்பி விடுதல், சிங்களப் பேரினவாதத்தின் திட்டமாகும்.**

ஏற்படுத்திய பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் மட்டும் படையினர் திருப்தியடையவில்லை. தளத்திற்கு வெளியே அதாவது தளத்தின் சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்விதம், அதிஉயர் பாதுகாப்பில் இருந்த முல்லைத்தளத்தை புலிகள்



மகளிர் படையின் களமுனைத் தளபதிகளுக்கு, தாக்குதல் வழிமுறையைத் தெளிவுபடுத்தும் சிறப்புத் தளபதி விதுசா.

வெளிவேலிக்கு அப்பால், ரோந்துச் சென்றிகளையும் அவதானிப்புக் குழுக்களையும் அனுப்பி, தளத்தின் வெளிப்புறத்தையும் படையினர் சதா கண்காணித்தனர். புலிகளின் வேவு வீரர்களை எல்லைக்கு வெளியே வைத்து அழிக்கும் திட்டத்தின் செயற்பாட்டு

எப்படித்தாக்கி அழித்தனர்?

இதற்கான விடை, தலைவர் பிரபாகரன் வரைந்த தாக்குதற் திட்டத்திலும் அதற்கான தந்திரோபாயத்திலுமே இருக்கின்றது. அத்துடன், ஆயிரக் கணக்கான போராளிகளைத் தயார்ப்படுத்தி சண்டை நிலைமைகளுக்கு ஏற்றாற்போல் களமுனைத் தளபதிகளுக்கு அறிவு றுத்தல்களை வழங்கிய தலைவர் அவர்களின் நெறிப்படுத்தலும் இருக் கின்றது.



தமிழின்புலிகள் இருக்கும் வரையில் எமக்குப் பயமில்லை;
அவர்கள் பாயும் களத்திலெந்தப் படைக்கும் ஜெயமில்லை !
காயப்பட்ட தோழனை சண்டையரங்கிலிருந்து அகற்றும் புலிவீரன்.

மேலும், புயலை ஒத்த வேகத்துடனும் 'புலி' யை ஒத்த வீரத்துடனும் களமாடிய புலிவீரர்களின் போர்த்திறனிலும் அது புதைந்து கிடக்கின்றது.

18ம் திகதி அதிகாலை முல்லைத்தளம் மீது –ஒரேசமயத்தில் பலமுனை களிலிருந்தும் தாக்குதல் தொடுக் கப்பட்டது. எதிரி எதையும் எதிர்பார்க்கவில்லை இடம் – நாள் – தாக்குதற் பரிமாணம் என்று எதையுமே அவன் எதிர்பார்க்கவில்லை.

பலம்வாய்ந்த தனது தற்பாதுகாப்பு நிலைகள் புலிகளால் தகர்த்தெறியப்படும் என்று படை வட்டாரம் நம்பியிருக்கவில்லை. ஆனால், படையினரைத் திகைப்பில் ஆழ்த்தியபடி அது நிகழ்ந்து விட்டது.

தளத்தைப் புலிகள் கைப்பற்றியபோது, இரண்டு 'ஆட்டிலறி' ஏவுகருவிகள் உட்பட பெருந்தொகையான ஆயு தங்களும் வெடிபொருட்களும் புலிகளின் கைகளுக்கு வந்தன. 1200 க்கு மேற்பட்ட படையினர் பலியாகினர். முல்லைத்தீவுப் படைத்தளம் அமைந்திருந்த நிலமும் மீட்கப்பட்டு விட்டது.

படைத்தளத்தை மீண்டும் கைப்பற்ற வெனத் தளத்திற்கு அருகே தரை யிறக்கப்பட்ட 'கொமாண்டோ' அணியினராலும் முல்லைத்தளத்தை மீண்டும் கைப்பற்ற முடியவில்லை. தரையிறக்கப்பட்ட படையினரும்–ஒட்டு மொத்த அழிவைத் தடுப்பதற்காகப் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். இந்தத் தரையிறக்கச் சண்டையில் சிங்களக் கடற்படையின் பீரங்கிக் கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டது. 150 ற்கும் மேற்பட்ட கொமாண்டோக்களும் பலியாகியுள்ளனர். ✷

**18ம் திகதி அதிகாலை முல்லைத்தளம் மீது -ஒரேசமயத்தில் பலமுனைகளிலிருந்தும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. எதிரி எதையும் எதிர்பார்க்கவில்லை இடம் - நாள் - தாக்குதற் பரிமாணம் என்று எதையுமே அவன் எதிர்பார்க்கவில்லை.**

# ஓயாத அலை....

ஆச்சரியமூட்டலை அடிப்படையாகக் கொண்டவை; தரையிறக்கம் இரகசியமாக நடைபெறும் "வந்தா வா! போனால் போ!" என்கின்ற துணிச்சலான நிலை இந்த வகைத் தரையிறக்கத்தில் இருக்கும்; ஈடுபடும் படையினரின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக இருக்கும்; ஏதாவது நாச வேலைகள் செய்ய அல்லது எவராவது ஒருவரைக் குறிவைத்து அல்லது ஒரு சிறிய இராணுவ நிலையை அழிக்க இந்த வகைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்படும். இந்த முயற்சி, தோல்வியைத் தழுவினாலும் குறித்த 'கொமாண் டோ'க்களின் இழப்பு என்கின்ற சிறிய விடயத்துடன், அதன் இராணுவப் பரிமாணம் நிறைவுபெறும். இத்தகைய இழப்பையிட்டு, சம்பந்தப்பட்ட இராணு வத் தலைமை பெரிதாகக் கவலை கொள்ளமாட்டாது.

ஆனால், மரபுவழித் தரையிறக்கம் இதற்கு முற்றிலும் நேர் மாறானது.

கடல் – வான் படைப்பலத்துடன் பெருமெடுப்பில் இந்த வகைத் தரையிறக்கம் நடக்கும். ஒரு பிரதேசத்தை கைப்பற்ற அல்லது அபாயத்தில் இருக்கும் ஒரு படைத்தளத்தை மீட்க என்று, பாரிய இராணுவ இலக்குகளே இந்த வகைத் தரையிறக்கங்களின் நோக்கங்களாகும்.

இத்தகைய முயற்சிகள் தோல்விய டைவது என்பது, பெருமளவிலான உயிர்ச் சேதத்தையும் ஆயுத இழப்புக்களையும் உண்டாக்கும்; அத்துடன், அரசுப் படையினதும், அதன் எதிர்ப் படையினதும் பலம் பற்றிய இராணுவ யதார்த்தத்தையும் புலப்படுத்திவிடும்.

சிலாவத்தைத் தரையிறக்கம் ஒரு மரபுவழித் தரையிறக்கமாகும். தரையி றக்கப்பட்ட நோக்கத்தை அடைய முடியாது சிங்களப் படை தோல்வி கண்டுவிட்டது; இதை எவரும் மறுக்க முடியாது.

இதன் காரணமாக, கடற்பலத்தில் தங்கி நின்று – தரையிறக்கத்தை நம்பி, வடபுலப் படைமுகாம்களைப் பாதுகாத்து வைத்திருக்க முடியும் என்ற அரசின் இராணுவக் கொள்கை, இப்போது சவாலைச் சந்தித்து நிற்கின்றது.

வான் பரப்பு மீதிலும் – கடற் பரப்பு மீதிலும் புலி வீரர்கள் தொடுத்த எதிர்த் தாக்குதல்களையும் எதிர்கொண்டபடி, அரசுப் படைகள் தரையிறக்கத்தைச் செய்துவிட்டன. ஆயினும், தரையிறங்கிய சிங்களச் சிறப்புப் படையினருக்கு முன்பாக, தடுப்புச் சுவர் போல நின்ற புலிகளின் சேனையை ஊடறுத்துக் கொண்டு முன்னேற, படையினரால் முடியவில்லை.

முல்லைத் தளம் மீதான தாக்குதல் தொடங்கிய தினம் அன்றே (18.07.96) மாலையில் உதவிப் படையின் ஒரு அணி தரையிறக்கப்பட்டுவிட்டது; அதுவும், தளத்திற்கு மிக அருகில் – சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் – அவர்கள் தரையிறக்கப்பட்டனர். இவர்கள் சாதாரண படையினர் அல்ல; 'கொமாண்டோ' பயிற்சி பெற்ற சிறப்புப் படையினர். சண்டை அனுபவம் மிக்க 'கொமாண்டோ'ப் படையினர்.

தளம் நோக்கிய இவர்களின் நகர்விற்கு கடற் படையும் வான் படையும் உதவின; எனினும், அவர்களது முயற்சி வெற்றி பெறவில்லை. அந்தளவிற்கு புலிகளின் தரைத் தாக்குதல்கள் அமைந்திருந்தன.

1991ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணிக் கடற் கரையில் தம்மால் செய்ய முடியாததை – 5 ஆண்டுகளின் பின் – புலிகள் சிலாவத்தையில் செய்து முடித்தனர்.

மரபு வழி போர் முறையிலான தரைப் போரில் புலிகள் இயக்கம் பெற்றுவரும் வளர்ச்சியையே இந்த வரலாற்றுச் சம்பவம் சுட்டிக் காட்டுகின்றது.

சிலாவத்தைத் தரையிறக்கம் தோல்வி கண்டது காரணமாக – எதிர்காலத்தில் – மரபு வழித் தரையிறக்கத்திற்கு அரசுப் படைகள் துணியாது என்ற பிழையான முடிவிற்கு எவரும் வரக்கூடாது. எனினும், இத்தகைய தரையிறக்கங்கள் இனிமேல், சூது விளையாட்டைப் போல அமையும் என்பதையும் சிங்களத் தளபதிகள் மறுக்கமாட்டார்கள்! ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஓயாத அலைகள்

## - ஒரு நோக்கு -

இராணுவ பரிமாணத்தைப் பொறுத்தளவில், ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கைக்கும், 1991இல் புலிகள் நிகழ்த்திய ஆ.க.வெ. (ஆகாய கடல் வெளி) சமருக்குமிடையே சில ஒத்த தன்மைகள் உண்டு. இரண்டும், இருவேறு முனைகளில் – இருவேறு வடிவிலான சண்டைகளைக் கொண்ட, பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆகும்.

'ஆ..க.வெ. நடவடிக்கை'யானது ஆனையிறவுத் தளம் மீதான ஒரு தாக்குதற் சண்டையையும் (offensive) வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட துருப்பினரைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தைக் கொண்ட தற்காப்புச் சண்டையையும் (Defensive) கொண்டமைந்திருந்தது. இதுபோல, 'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கையும், முல்லைத்தீவுத் தளம் மீதான தாக்குதலையும், சிலாவத்தையில் தரையிறக்கப்பட்ட 'கொமாண்டோ'க்களுடனான தற்காப்புத் தாக்குதல்களையும் கொண்ட மைந்துள்ளது.

எனினும், 'ஆ.வெ.க. நடவடிக்கை'யின் போது, புலிகள் இந்த இரண்டு வகைப் போர் அரங்குகளிலும் வெற்றி பெற முடியவில்லை. ஆனால், 'ஓயாத அலைகள்' நடவடிக்கையில், இருவகைச் சண்டைகளிலும் புலிகள் முழு வெற்றியைப் பெற்றுவிட்டனர்.

'ஓயாத அலைகள்' இராணுவ வெற்றியானது நான்கு விடயங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது.

(1) பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தை அழித்தமை.

(2) பெருந்தொகையில் ஆயுதங்களும், வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டமை.

(3) தரையிறக்கத்தை முறியடித்தமை.

(4) நிலத்தை மீட்டமை.

இந்தத் தாக்குதலில் 1200இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டமை, உலக இராணுவ வரலாற்றில் ஒரு சாதனையாகவே பதியப்படக்கூடியது. நாடுகளுக்கிடையேயான பாரிய போர்களில் நடைபெறக்கூடிய இத்தகைய பெருந்தொகைச் சாவுகள், ஒரு விடுதலைப் போரில், கெரில்லா முறையிலான ஒரு திடீர்த் தாக்குதலில் நிகழ்வது என்பது அரிதான விடயமாகும். 1954ஆம் ஆண்டு, தீன்-பின்-பூ (வியட்நாம்) சமரில், இதேபோன்றதொரு பெரும் அழிவை பிரான்சுப் படைகள் சந்தித்துள்ளன. ஆனால், அந்த முற்றுகைச் சமர் 56 நாட்கள் நடந்ததென்பது குறிப்பிடத் தக்கது. அதில் 8000 பிரான்சுப் படையினர் பலியாகினர். ஆனால், அதைவிட அதிக தொகையான வியட்னாம் போராளிகள் இறந்தனர்.

குறைந்த எண்ணிக்கையான போராளிகள் வீரச்சாவடைந்து பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரைக் கொன்றது, முல்லைத் தளத் தாக்குதலின் சிறப்புப் பரிமாணம் ஆகும். அத்துடன், இரண்டு மூன்று நாள் சண்டையில் ஆயிரத்திற்கும் அதிகமான அரசுப்படையினர் கொல்லப் பட்டமை, அதி சிறப்புவாய்ந்த ஒரு இராணுவ நிகழ்ச்சியாகும். மொத்தத்தில் இராணுவ 'கின்னஸ்' புத்தகத்தில் பதியப்பட வேண்டிய ஒரு வீரசாதனை என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

'ஒப்பறேசன் தவளை'யில் கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, 'ஓயாத அலைகள்'க்குள் சிக்கிச் செத்த படையினரின் தொகை, ஏறக்குறைய இருமடங்காகும்.

"'சூரியக் கதிர்'களுடன் புலிகள் இயக்கத்தின் பற்களும் – நகங்களும் பிடுங்கி எறியப்பட்டுவிட்டன" என்ற அரசின் பரப்புரையை நம்பிய சிங்கள மக்கள், செய்தி அறிந்து திகைத் திருப்பார்கள். எனினும், படையினர் மத்தியில் பீதியூட்டும் விடயம் யாதெனில், இந்த இராணுவ அழிவு எப்படி நடந்தது என்பதைக் கண்டறிய முடியாத கையறு நிலையில் இராணுவத் தலைமை இருப்பதாகும். 'ஓயாத அலைகள்' நடவடிக்கையில் புலிகள் பெற்ற இராணுவ வெற்றியின் உளவியல் பரிமாணம் இதுவாகும்.



அதிர்ச்சி அடி: முல்லையில் கைப்பற்றப்பட்ட இராணுவ வாகனங்களில் 'பவள்' கவச வண்டிகளும் அடங்கும். கைப்பற்றப்பட்ட 'பவள்' வண்டியுடன் தளத்தில் புலிகள்

'போராட்ட வண்டி' புதையுண்டு போகும் சந்தர்ப்பங்களிலெல்லாம், தலைவர் பிரபாகரன், தானே நேரடியாக முன்னின்று போராட்ட வண்டியை முன்னோக்கி உந்தித் தள்ளும் வரலாற்றுப் பொறுப்பை ஆற்றி வந்துள்ளார்.

'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கை வாயிலாக இம்முறையும் அவ் வரலாற்றுப் பொறுப்பை ஆற்றியுள்ளார்.

அத்துடன், தளத்தினுள் சிக்குண்ட படையினரை மீட்டுவர அனுப்பிய 'கொமாண்டோ'ப் படையினரையே மீட்டெடுக்க வேண்டிய அளவுக்கு, கள நிலைமை சிக்கலாகிவிட்டது!

முல்லைத்தீவுத் தளம் மீதான தாக்குதலைப் பொறுத்தவரை, காலம் முக்கிய இடத்தை வகித்துள்ளது.

"புலிகளின் பலத்தில் 70 வீதம் அழிக்கப்பட்டுவிட்டது மிகுதி 30 வீதத்தையும் வன்னியில் வைத்து அழிக்கப் போகிறோம்" என்ற ரத்வத்தவின் எண்கணித விமர்சனம், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கவனத்தை ஈர்ந்திருந்த காலம் அது –

புலிகள் இயக்கத்தின் இறுதி அத்தியாயம் எப்படி அமையப் போகின்றது என்று, உலகம் அவதானித்துக் கொண்டிருந்த நேரம் அது –

குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியதைக் கண்டு, போராட்ட வெற்றியில் எமது மக்களும் அவநம்பிக்கை கொண்ட காலம் அது –

இத்தகையதொரு கஸ்ட காலத்தில் – அகில உலகுமே ஆச்சரியப்படும் வகையில் – முல்லைத்தீவுத் தளத்தை நிர்மூலம் செய்து, தமிழினத்துக்கு ஒரு பெரிய வெற்றியைத் தலைவர் பிரபாகரன் பெற்றுக் கொடுத்துள்ளார்.

1200க்கும் மேற்பட்ட படையினரைக் கொன்றது மட்டுமல்ல – 'ஆட்டிலறி', ஆர்.சி.எல், 'பவள்' மற்றும் 120 எம்.எம். மோட்டார்களுடன் பெருந்தொகையான வெடிப் பொருட்களையும் கைப்பற்றியதோடு, ஒரு பீரங்கிக கப்பலையும் அழித்து, சிங்கள பேரினவாதப் பூதத்திற்குப் புலிகள் ஒரு 'அதிர்ச்சி வைத்தியம்' செய்துள்ளனர்.

இந்தக் கதைகள் வெளியே உறுதிப்படுத்தப்பட்டபோது உலகம் ஆச்சரியப்பட்டது; விமர்சகர்கள் வாயடைத்துப் போயினர். இந்த இராணுவ அற்புதம் எப்படி நடந்தது என்று, அவர்கள் மலைத்துப் போயினர்; இதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக உலகப் போர் வரலாற்றை மீட்டுப் பார்த்தனர்.

1968ஆம் ஆண்டு, அமெரிக்கப் படையினர் மீது வியட்னாம் போராளிகள் நிகழ்த்திய – 'ரெற் தாக்குதல்' (Tet Offensive) என்று அழைக்கப்பட்ட ஒரு பெருந் தாக்குதலை முல்லைத்தீவுத் தளத் தாக்குதலுடன் ஒப்பிட்டு உலகச் செய்தியாளர் ஒருவர் வர்ணித்திருந்தார்.

அமெரிக்கப் படைகளின் கட்டுப் பாட்டுக்குள் இருந்த தென் வியட்னாமின் பிரதான நகரங்கள் மீது ஒரு நாள் திடீரென 'வியட்கொங்' போர் தொடுத்தது; இதற்கு 'ரெற் தாக்குதல்' என்ற பெயரும் இட்டது.

இந்தத் தாக்குதலிலும் காலம் மிக முக்கிய இடத்தை வகித்தது. தென் வியட்னாமில் இருந்து வியட்கொங் இயக்கத்தை தாம் நசுக்கிவிட்டதாக, அமெரிக்கத் தலைமை தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்த காலம் அது; எல்லாம் முடிந்துவிட்டது என்று அமெரிக்க மக்களும் நம்பியிருந்த வேளை அது. அந்தச் சூழ்நிலையில் தான், ஒரு நாள் விடிகாலை 'ரெற் தாக்குதல்' என்ற பெயரிலான அந்தப் பாரிய மரபு வழித் தாக்குதலை, அமெரிக்கப் படை நிலைகள் மீது வியட்கொங் போராளிகள் தொடுத்தனர். இந்தப் பெரும் தாக்குதல், அமெரிக்க அரசுக்குப் பெரிய அரசியல் நெருக்கடியைக் கொடுத்துவிட்டது.

இதுபோலவே, "புலிகளின் கதையும் முடிந்துவிட்டது" என்று சிங்கள அரசு பிரகடனப்படுத்தியிருந்த காலகட்டத்தில் தான் முல்லைத்தீவுத் தளம் மீதான பெரும் தாக்குதலும் நிகழ்ந்தது.

தொடர்ச்சி 8 ம் பக்கம்...



சமரின் போதே இறந்த சிப்பாயின் கனரக ஆயுதங்களைச் சேகரிக்கும் தமிழர் படையின் பெண்களணி

www.tamilarangam.net



# ஓயாத ........

எனினும், வியட்னாமின் புகழ்பூத்த தளபதி **ஜெனரல் ஜியாப்** தலைமை ஏற்று நடத்திய 'ரெற்' தாக்குதலுக்கும், **தலைவர் பிரபாகரன்** திட்டமிட்டு தலைமை தாங்கி நடாத்திய 'ஓயாத அலைகள்' தாக்குதலுக்கும் இடையே, அரசியல் மற்றும் உளவியல்



புலிகளோடு மக்கள் ; மக்களே புலிகள்! *தளப் பகுதியிலிருந்து ஆயுதங்களை அகற்றும் பணியில் தம் போராளிகளுக்குத் துணை செய்யும் மக்கள்.*

பரிமாணங்களில் ஒற்றுமை இருந்தாலும், இராணுவப் பரிமாணத்தில் வேறுபாடுகள் பல உண்டு.

'ரெற்' தாக்குதல் அமெரிக்கப் படையினரை திணற வைத்தது என்பது உண்மை; ஆனால், ஒரு சில நாட்களில் அப் பெருந் தாக்குதலை அமெரிக்கப் படைகள் முறியடித்துவிட்டன. ஆகவே 'ரெற்' தாக்குதல் இராணுவ ரீதியில் வியட்கொங் இயக்கத்திற்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

ஆனால், 'ஓயாத அலைகள்' நடவடிக்கையானது, அரசியல் மற்றும் உளவியல் பரிமாணங்களுடன் – ஒரு பாரிய இராணுவ வெற்றியையும் புலிகள் இயக்கத்துக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. 'ரெற்' தாக்குதலைப் போலல்லாது, இங்கே, தாக்குதல் இலக்கைப் புலிகள் முழுமையாகக் கைப்பற்றி – தம் வசப்படுத்திவிட்டனர்; அங்கிருந்த சிங்களப் படையை முழுமையாக அழித்துவிட்டனர்; எதிரி வைத்திருந்த ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றிவிட்டனர்; எதிரி ஆக்கிரமித்து வைத்திருந்த நிலப் பகுதியையும் மீட்டுவிட்டனர்.

'ரெற்' தாக்குதலை 'ஓயாத அலைகள்' தாக்குதலுடன் இணைத்துப் பார்த்த அந்த வெளிநாட்டுச் செய்தியாளரின் ஒப்பீடு, புறச்சூழல் ரீதியாக மிகச் சரியானதே.

எனினும், 'ஓயாத அலைகள்' தாக்குதலின் இராணுவப் பரிமாணத்தை, 1941இல் யப்பான் நடாத்திய **'பேள்' துறைமுகத் தாக்குதலுடன்** – சில விடயங்களில் ஒப்பிட முடியும்.

'பேள்' துறைமுகத்தின் – உட்புக முடியாத அதன் பாதுகாப்பான அமைவிடம் – என்பவற்றுக்கு மத்தியில் யப்பானியப் படைகள் நடாத்திய, துணிகரமான – ஆச்சரியமூட்டும் வெற்றித் தாக்குதல், இராணுவ வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

தாக்குதலின் தன்மை – எதிரிப் படைக்கு ஏற்படுத்திய அழிவு என்பவற்றுடன் ஒப்பிடும்போது, 'பேள்' துறைமுகத் தாக்குதல், 'ஓயாத அலைகள்' நடவடிக்கையின் சில இராணுவ அம்சங்களுடன் ஒப்புநோக்கத்தக்கது.

கடந்த ஆண்டு (1995) புலிகள் இயக்கம் பல இராணுவப் பின்னடைவுகளைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது; இது காரணமாக விடுதலைப் போராட்டம் ஒரு ஸ்தம்பித்த நிலையில் நின்றது.

இவ்விதம் 'போராட்ட வண்டி' புதையுண்டு போகும் சந்தர்ப்பங்களிலெல்லாம், தலைவர் பிரபாகரன், தானே நேரடியாக முன்னின்று போராட்ட வண்டியை முன்னோக்கி உந்தித் தள்ளும் வரலாற்றுப் பொறுப்பை ஆற்றி வந்துள்ளார்.

'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கை வாயிலாக இம்முறையும் அதையே செய்துள்ளார்.

தென்மராட்சி – வடமராட்சியில் இருந்து போராளிகளை வன்னிக்குப் பின்வாங்குமாறு உத்தரவிட்ட பின்னர், வன்னியில் ஒரு பாரிய தாக்குதலை நடாத்தி இராணுவபல சமநிலையில் தமிழினத்திற்குச் சார்பான மாற்றத்தை ஏற்படுத்த, தலைவர் தீவிரமாக உழைத்தார்.

முல்லைத்தீவு இராணுவத் தளத்தை நிர்மூலமாக்கி அந்த பலச் சமநிலையை உருவாக்க முடிவெடுத்தார்.

ஏற்கெனவே, பல இராணுவ இழப்புக்களை அடுத்தடுத்துச் சந்தித் நிலையில், முல்லைத்தளம் மீதான தாக்குதலும் புலிகளுக்கு ஒரு இராணுவப் பின்னடைவைக் கொடுக்குமாயின் போராட்டத்தின் தலைவிதி என்னவாகும் என்பதையும், தலைவர் தெரிந்து வைத்திருந்தார்.

எனவே, தாக்குதலின் வெற்றியை 100 வீதம் உறுதிப்படுத்த வேண்டிய தேவை அவருக்கிருந்தது; இதனால், தாக்குதலின் முழுப் பொறுப்புக்களையும் தலைவர் தன்வசம் எடுத்தார்.

தாக்குதலுக்கான பயிற்சி, வேவு, சமரின் போதான மருத்துவம், வழங்கல் வேலைகளுக்கான முன்னேற்பாடுகள் மற்றும் தாக்குலணிகளை இடம் மாற்றுதல் என்று தாக்குதல் தொடர்பான எல்லா வேலைகளையும் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் வைத்திருந்தார்.

திட்டங்களின்படி அச்சொட்டாகத் தாக்குதல்களை நடாத்தவும் – தாக்குதல் தொடர்பான இரகசியம் பேணலை முழுமையாக உறுதிப்படுத்தவும் அவ்விதம் செய்தார்.

முல்லைத்தீவு தள வெற்றிக்கான அடிப்படைகளில், **'இரகசியம் காத்தல்'** முக்கிய இடத்தை வகித்தது; அத்துடன், அற்புதமான தாக்குதல் திட்டம் வெற்றியின் முதுகெலும்பாக இருந்தது. அதேவேளை, தாக்குதலின்போது, காட்டப்பட்ட வேகமும் – திகைப்பூட்டலும் வெற்றிக்கு அணி சேர்த்தன.

இந்த வகையில், சோர்வடைந்திருந்த தமிழினத்திற்கு நம்பிக்கை தரும் வகையிலும் – தமிழர் படையின் ஆயுதபல உயர்ச்சிக்கும் வழிகோலும் வகையிலும், 'ஓயாத அலைகளின் வெற்றி அமைந்துவிட்டது.

இந்த பெருந் தாக்குதலைத் திட்டமிட்டு – நெறிப்படுத்தி நடாத்தியதன் மூலம், தலைவர் பிரபாகரன், ஒரு வரலாற்று வெற்றியைத் தமிழினத்திற்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

'ஓயாத அலைகளி'ல் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கையைப் போலவே அதில் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் வகைகளும் – தொகைகளும் போராட்டத்திற்குப் புதிய பலத்தைக் கொடுத்துள்ளன.

56 நாட்கள் நடந்த தீன்-பின்-பூ (வியட்நாம்) சமரில், பிரான்சுப் படைகளில் 8000 பேரும் அதைவிட அதிக தொகையான வியட்னாம் போராளிகளும் பலியாகினர்.

1968ஆம் ஆண்டு, அமெரிக்கப் படையினர் மீது வியட்னாம் போராளிகள் நிகழ்த்திய - 'ரெற் தாக்குதல்' அமெரிக்கப் படையினரை திணற வைத்ததாயினும், ஒரு சில நாட்களில் அப் பெருந் தாக்குதலை அமெரிக்கப் படைகள் முறியடித்தன. 'ஓயாத அலைகள்' நடவடிக்கை, ஒரு பாரிய இராணுவ வெற்றியை தமிழர் படையணிக்குச் சேர்த்துள்ளதுடன் இராணுவ 'கின்னஸ்' புத்தகத்தில் பதியப்பட வேண்டிய ஒரு வீரசாதனையாகியுள்ளது.

முதன் முதலாக, புலிகளின் கைகளுக்கு, நடுத்தர தூர வீச்சைக் கொண்ட (15.கி.மீ. பாயக்கூடிய) 'ஆட்டிலறி'களில்



**ஆனையிறவுச் சமரின் முடிவிற்கும், முல்லைச் சமரின் முடிவிற்கும் இடையில் நேரெதிர் வேறுபாடு - கடலில் புலிகள் இல்லாததால் அன்று அது நடந்தது ; 'கடலெங்கும்' புலிகள் நிறைந்ததால் இன்று இது நடந்தது!**

இரண்டு வந்து சேர்ந்துள்ளன. அத்துடன் ஆர்.சி.எல். மற்றும் 120 எம்.எம். (5 அங்குல) மோட்டார்களுடன், அவற்றுக்கான எறிகணைகளும் கணிசமான அளவில் கைப்பற்றப்பட்டுள்ளன.

மரபு வழிப் படையாக வளர முனையும் புலிகளின் முயற்சிக்கு, கைப்பற்றப்பட்ட இந்த மரபுப் போர் ஆயுதங்கள் பெரிதும் உதவியுள்ளன. இந்த ஆயுதங்களை வைத்துக் கொண்டு – எதிர்காலத்தில் – போரில் பல அதிசயங்களை, தலைவர் பிரபாகரன் நிகழ்த்திக் காட்டுவார் என்று எதிர்பார்க்கலாம்.

கைப்பற்றப்பட்டஆயுதங்களின் வகைகள், கொல்லப்பட்ட படையினரின் தொகை என்ற வகையிலான இராணுவப் பரிமாணம் ஒருபுறம் இருக்க 'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கை, சிங்களவர் – தமிழர் படைகளுக்கிடையேயான போர் வரலாற்றிலும் ஒரு பிரத்தியேக இடத்தை வகிக்கப் போகின்றது.

சிங்கள அரசின் முப்படைப் பலப் பிரயோகத்துடன் நடந்த கடல் – வான் வழித் தரையிறக்கத்தை முறியடித்த செயலே, அதன் பிரத்தியேக முக்கியத்திற்குக் காரணமாகும். தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்ட வரலாற்றில் இந்தச் சம்பவம், ஒரு மைல் கல்லாக அல்லது போராட்ட வளர்ச்சியைச் சுட்டிக்காட்டும் ஒரு படிக் கல்லாக அமையும் என்பது உறுதி.

உதவிப் படை என்பது, மரபு வழிப் போர்முறையில் குருதிச் சுற்றோட்டம் போன்றது. நெருக்கடிக்குள் சிக்குண்டு திண்டாடும் படைத் தளங்களுக்குப் புதிய சக்தியை ஊட்டி அதைப் பாதுகாப்பது, இந்த உதவிப் படைதான்.

கடற்படைப் பலத்தாலும் வான் படைப் பலத்தாலும் சிலாவத்தையில் தரையிறக்கப்பட்ட 'கொமாண்டோ' துருப்பினரைக் கொண்ட இந்த உதவிப்படை, தனது இலக்கை அடைய முடியாது – வந்த வழியே திரும்பிச் சென்றதற்குக் காரணமான புலிகளின் மரபுப்போர் வளர்ச்சிதான், சிங்களப் பேரினவாத இராணுவ சக்திகளுக்கு அதிக கவலையை ஏற்படுத்தியிருக்கும்.

தரையிறக்கப் போர்ச் செயற்பாடுகளை இரண்டு பிரதான வகைகளுக்குள் அடக்கிவிடலாம். ஒன்று, 'கொமாண்டோ' பாணியிலான தரையிறக்கம்; மற்றது, மரபு வழித் தரையிறக்கம்.

'கொமாண்டோ' பாணியிலான தரையிறக்கம் கடல் வழி மூலமும் நடக்கும்; வான் வழி மூலமும் நடக்கலாம். இந்த வகைத் தாக்குதல்கள்,

தொடர்ச்சி 6ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓயாத அலைகளில் வித்தாகிய கடற் கரும்புலிகள்



மேஜர் கண்ணபிரான் / அப்துல்லா
சாமித்தம்பி புலேந்திரன்
அம்பாறை
01.01.1974 - 19.07.1996



மேஜர் செல்லப்பிள்ளை
இராமலிங்கம் செல்வராஜா
மன்னார்
08.08.1973 - 19.07.1996



மேஜர் பதுமன்
ஆனந்தமயில் பாலமுரளி
யாழ்ப்பாணம்
18.06.1976 - 19.07.1996



மேஜர் மிதுபாலன்
வேதாரணியம் ஜெயகாந்தன்
யாழ்ப்பாணம்
28.05.1975 - 19.07.1996



மேஜர் பார்த்திபன் / வேதமணி
உலகநாதன் ரமேஸ்
யாழ்ப்பாணம்
22.02.1977 - 19.07.1996

ஓயாத அலைகள்" வெற்றிக்கு வித்தாகிய கடற் கரும்புலிகள் இவர்கள்! தமிழினம் பெற்ற வரலாற்றுப் பெருமைமிக்க அவ் வெற்றிக்குத் தம்மை ஆகுதியாக்கியவர்கள். ஆம்! முல்லைத் தள வெற்றிக்கு முதுகெலும்பாய் நின்ற கடற்புலிகள், உதவிப் படையைத் தரையிறக்க வந்த எதிரியின் கடற்படைக் கப்பற் தொகுதியை நேர் எதிர் கொண்டு சமராடிக் கொண்டிருந்த வேளை - வெடி மருந்துப் படகுகளுடன் உச்ச விசையில் - காற்றென விரைந்த இவ் வீரர்கள் - பண்டாரவன்னியனின் கடலிலேயே எதிரியை சமாதியாக்கினர்.



மேஜர் சுடரொளி
செபமாலை இரத்தினமலர்
யாழ்ப்பாணம்
20.11.1972 - 19.07.1996

*பெரும் போரிற் புலிகள் புறங்கண்டார் பகையை*
*பேருவகை கொண்டோம் பெரும் புகழைப்பெற்றார் தமிழினத்தார்!*
*கடற்கரும்புலிகள் கனலாகிக் காத்தார் தமிழ்வீரம்*
*கரிகாலன் எம் பிரபாகரன் வென்றான் முல்லை மாநிலமே!*

*( -'ரணவிரு' மூழ்கடித்த வீரசாதனையை, தனது கண்களால் பார்த்தபோது எழுந்த உணர்வுகளை, செ. தமிழேந்தி (நிதித் துறைப் பொறுப்பாளர்) கவிதையாக எழுதியது. )*



கப்டன் சயந்தன்
தம்பிப்பிள்ளை ;ரைரத்தினம்
அம் றை
23.04.1972 - 19.07.1996

## உண்மை என்ன......

காயமடைந்தவர்களது எண்ணிக்கை 1500 ஆகும். எனவே (படை) வீதாசார அடிப்படையில் இது புலிகளுக்குப் பாரிய இழப்பு" என்பதாகும்.

"ஓயாத அலைகள்" இராணுவ நடவடிக்கையில், மொத்தம் 332 புலிவீரர்கள் மட்டுமே வீரச்சாவடைந்துள்ளனர். சில நூறுபேர் காயமடைந்தனர். ஆனால் புலிகளின் உயிரிழப்பைப் பலமடங்காக அதிகரித்துக்காட்டி தமது தோல்வியிலும் ஒரு வெற்றி உள்ளது என்பது போலக் காட்ட ரத்வத்த முயற்சித்தார்.

ஆனாலும், பொய்யான தரவுகளை அடிப்படையாகக் கொண்ட அவரது நியாயப்படுத்தல்கள் அவருக்கே திருப்தி அளிக்கவில்லைப் போலும். அதனால்தான் அவர் ஒரு போர்த் தத்துவத்தையும் தனது உரையில் சேர்த்துக் கொண்டார்.

"சில சமர்கள் தோல்வியிலும் முடியலாம். சில சமர்கள் வெற்றியிலும் முடியலாம். இராணுவ ரீதியில் இவை எதிர்பார்க்கப்பட வேண்டியதே" என்றார் அவர்.

போர் யதார்த்தத்தை நிதானமாகப் புலப்படுத்த விரும்பும் ஒரு முதிர்ச்சி பெற்ற இராணுவத் தளபதிபோல ரத்வத்த உரையாற்றினார்.

உண்மையில், ரத்வத்த அப்படியானவரா?

'ரிவிரச' சமரை சிங்களப்படை வென்ற பின், நாடாளுமன்றத்திற்கு உள்ளும்-புறமும் அவர் வெளிப்படுத்திய இராணுவத் திமிர் இந்த யதார்த்தவாதப் பேச்சிற்கு - இந்தப்போர்த் தத்துவத்திற்கு - முற்றிலும் முரணானதாகவல்லவா இருந்தது.

ரத்வத்த ஏற்றுக்கொண்டாலும் சரி ஏற்காதுவிட்டாலும் சரி, முல்லைத்தீவில் சிங்களப்படை ஒரு பாரிய உயிரிழப்பைச் சந்தித்துவிட்டது. அத்துடன், இந்தச் சமரில் சிங்களப்படை இழந்த ஆயுதத் தளபாடங்கள், எதிர்காலத்தில் சிங்களப்படைக்கு பெரும் அச்சுறுத்தலையும் கொடுக்கப் போகின்றது! ✷

## முல்லைச் சமர்: நாடாளுமன்றில்...

இதனால் அன்று மாலை 4.00 மணிக்கு வெற்றிகரமான தரையிறக்கத்தை கடற்படை செய்து முடித்தது. அன்றைய சண்டையில் 10ற்கும் மேற்பட்ட கடற்புலிப்படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

23 ஆம் திகதி காலை 10 மணிக்கு இரண்டு தரையிறக்கும் கலங்கள் துருப்புக்களைத் தரையிறக்கின. அந்தநேரம் புலிகளின் ஒரு மோட்டார்க்குண்டு தரையிறக்கும் தளத்திற்கு சிறு சேதத்தை விளைவித்தது. இதில் 10படையினர் பலியாகினர். 21பேர் காயமடைந்தனர்.

பாதுகாப்பான கடற்கரை ஒன்றைப்பிடித்து வைத்திருப்பதில் படையினர் வெற்றியீட்டினர். அங்கிருந்து முல்லைத்தீவுத் தளத்தை நோக்கி நகர முயற்சி எடுத்தனர்.

இதேவேளை, ஏற்கெனவே திட்டமிட்டபடி கிளிநொச்சி நோக்கிய நகர்வை ஆனையிறவுப்படையினர் ஆரம்பித்தனர். 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப்படை நடவடிக்கைக்கு சத்ஜய எனப் பெயரிட்டோம். 48மணி நேரத்திற்குள் எமது படையினர் பரந்தனை அடைந்தனர். இந்த இராணுவ நடவடிக்கையில் பங்கு கொண்ட படையினரில் விசேட படையினரும் அடங்குவர். இவர்கள் உதவிப்படையாக முல்லைத்தீவில் தரையிறக்கப்பட்டவர்கள் ஆவார்.

27 ஆம் திகதி, 'சத்ஜய'வின் முதற்கட்டம்-பரந்தனைக் கைப்பற்றியதும் முடிவடைந்தது.

இந்த வேளையில், முல்லைத்தீவுத் தளம் செயலற்றுக்கிடந்தது. இந்தத்தளம் தொடர்பான முடிவு பின்னர் எடுக்கப்படும்.

படைமுகாம்களின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் விடயத்தில் எத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று, ஒரு கேள்வி எழுப்பப்படுகின்றது. அதற்கு விரிவாகப் பதிலளிப்பது, படையினரைக் காட்டிக்கொடுப்பதற்கு ஒப்பானதாகிவிடும்.

பொதுவாக, வடக்கு கிழக்கில் அமைந்துள்ள படைமுகாம்கள், வெளிப்புறப் பாதுகாப்பு வேலிகள் பலவற்றால் அரண்செய்யப்பட்டு-கடும் எச்சரிக்கையுடன் காவல் காக்கப்படுகின்றன. தினசரி பயிற்சிகள் இங்கே நடத்தப்படுகின்றன. திடீர் அபாயங்களைச் சமாளிப்பதற்கேற்ற திட்டங்கள் கைவசம் வைத்திருக்கப்படுகின்றன. இப்படியென்றால் பிழை எங்கே நடந்தது?

புலிகள் தாக்கப்போகின்றார்கள் என்ற புலனாய்வுச் செய்தி கிடைக்கவில்லையா? எனச் சிலர் கேட்கின்றனர்: அல்லது விடுவிக்கப்பட்ட எச்சரிக்கை அசட்டை செய்யப்பட்டதா எனவும் வினவுகின்றனர்.

புலனாய்வு விடயத்தில் ஒரு குறைபாடு இருந்துள்ளது என்று சந்தேகம் உள்ளது.


வடக்குக் கிழக்கு முகாம்களைப் பொறுத்தவரை, எப்போதும் தயார் நிலையில் இருத்தல் என்பது கடைப்பிடிக்கப்படுகின்றது. புலிகளின் பலமான பகுதியில் அமைந்திருந்த முல்லைத்தீவின் உசார் நிலை மிகவும் உயர் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

ஒரு விடயத்தை நாம் அசட்டை செய்ய மடியாது. புலிகளின் தீவிர கண்காணிப்பு மிகுந்த ஒரு பகுதியில் முல்லைத்தீவுத் தளம் அமைந்திருந்தது என்பதே அதுவாகும்.

( அடுத்த இதழில் முடிவுறும் )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழரின் மாபெரும் இடம்பெயர்வின் ஓராண்டு நினைவாக...

## லட்சமாய் பெயர்ந்த நீ லட்சமாய் பாய்ந்தால் ...!

அரக்கியின் ஆணையுடன்
அனுருத்தன் படை நகர்த்த
டாங்கிகள் விமானங்கள்
குண்டுகளை பொழிந்தன.

அன்னை மண்ணில் அந்நிய படைகள்
ஆதிக்கவெறியுடன்
அட்டகாசம் புரிந்து
ஆண்டுகள் ஒன்றானது.

சொத்துக்கள் அழிய
சொந்தங்கள் சிதற
போராட்டமே வாழ்வாக
இடம்பெயர்ந்தாய் நீ!

ஆண்டொன்றாகியும்
அவலங்கள் அகன்றனவா?
ஆதிக்க வெறிதான் குறைந்தனவா?
அனைத்துலகம்தான் கண் திறந்ததா?

வீடு போச்சு.
பொருள் பண்டம் போச்சு
சொந்த பந்தங்களும் போச்சு
வீரமும் விலை போச்சா!

மானமுள்ள மறத்தமிழனே!
எல்லாம் இழந்தபின்
போராடுவோம் என்றிருக்காது
இன்றே போராட புறப்படு!

லட்சமாய் பெயர்ந்த நீ!
லட்சமாய் பாய்ந்தால்
நிச்சயமாய் ஓடுவான் எதிரி
மிச்சமாய் இருப்பது நீ மட்டுமே!

அனைத்துலக கவன ஈர்ப்பு வாரத்தை (30.10.1996 - 05.11.1996)
முன்னிட்டு, படுகொலை செய்யப்படுவதற்கு சில தினங்களுக்கு
முன் ஈழமுரசு ஆசிரியர் கஜன் அவர்களின்
கற்பனையில் எழுந்த ஓவியமே இது.

www.tamilarangam.net



# "வன்னி நோக்கிய இடப்பெயர்வு" ...

இவ்வளவு திட்டங்களையும் வைத்துக் கொண்டு சிங்கள இராணுவம் கிட்டத் தட்ட 40 ஆயிரம் பேருக்கு மேல் முப் படைகளையும் குவித்து, அவர்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி அங்குலம் அங்குலமாகத்தான் முன்னேற முடிந்தது. அதற்கிடையில் பிரபாகரனின் வேண்டு கோளை ஏற்று ஒட்டுமொத்தமாக மக்கள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறினார்கள்.

> நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. உலக சரித்திரத்திலேயே இப்படி ஒரு நிகழ்ச்சி இதுவரை நடந்ததில்லை. இனிமேல் நடக்குமா எனவும் சொல்ல முடியாது. பிரபாகரன் அவர்கள் சிறந்த இராணுவ நிபுணர் என்பது மட்டுமல்ல, சிறந்த இராஜதந்திர நிபுணர் என்பதையும் இந்தப் பிரச்சினையிலே நிருபித்துக் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தை நோக்கி அங்குலம் அங்குலமாகத்தான் முன்னேறியபோது தமிழ் நாட்டிலுள்ள பத்திரிகைகளில், இன்றைக்கு இரண்டு மைல் தூரம் சிங்கள இராணுவம் முன்னேற்றம், இன்று நான்கு மைல் தூரம் முன்னேற்றம், இன்று ஐந்து மைல் தூரம் முன்னேற்றம் என்று வரிசையாகச் செய்தி வெளிவந்தது. கிட்டத்தட்ட ஐம்பது நாட்களாக இந்தச் செய்திகள் வெளிவந்துகொண்டிருந்தன. நாங்களும் ஒரு நாள் உட்கார்ந்து, இவர்கள் கணக்கை ஒரு நாளைக்கு சராசரி 2 மைல் என்று ஐம்பது நாளைக்கும் போட்டால் 100 மைல் ஆகிறது. அப்படியானால் சிங்கள இராணுவம் இதற்குள் யாழ்ப்பாணத்தைப் பிடித்து மன்னாரைக் கடந்து, மன்னார் வளை குடாவினூடாகத் வேதாரணிய த்தைக் கடந்து தஞ்சாவூருக்கல்லவா வந்திருக்க வேண்டும். இவர்கள் ஏன்? இப்படிப் பொய்யான செய்திகளைப் போடு கிறார்கள் என்று நினைத்தோம். வடி கட்டிய உண்மைக்குப் புறம்பான பொய்ச் செய்திகளையே சிங்கள அரசு உலகிற்குக் கொடுத்தது என்பதற்காகவே நான் இதைச் சொல்கிறேன்.

40 ஆயிரம் பேரைக் கொண்ட இராணுவம் நவீன ஆயுதங்களோடு முன்னேறி வருகின்றபோது, போதுமான ஆட்பலமுமில்லாமல் புவியியல் சாதகமும் இல்லாமல் அதை வீணாக எதிர்த்துப் போராடுவது என்பது வீணான வேலை என்பதை முடிவு செய்த பிரபாகரன் அவர்கள் புலிகளை மட்டுமல்ல, பொது மக்களையும் சேர்த்துப் பின்வாங்கச்

> விமானந்தாங்கிக் கப்பலோ, நாசகாரிக் கப்பலோ, நீர்மூழ்கிக் கப்பலோ அல்லது விமானப் படையோ எந்தத் துணையும் இல்லாமல் 9 தமிழ் இளைஞர்கள் -9 கடற்கரும்புலிகள், 1941களிலே யப்பானிய கடற்படை சாதித்த அதே சாதனையைத் தங்களுடைய உயிரைத் தியாகம் செய்ததன் மூலம் கொழும்புத் துறைமுகத்தில் நிலைநாட்டினார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போது ஒவ்வொரு தமிழனின் நெஞ்சமும் பெருமிதத்தால் விரிவடைகின்றது.

செய்தார். ஒரு நகரத்தைச் சேர்ந்த 5 இலட்சம் மக்கள் வாழையடி வாழையாக எந்த மண்ணிலே வாழ்ந்தார்களோ, எந்த மண்ணிலே குடும்பம் குடும்பமாக வேரூன்றி நின்றார்களோ அந்த மண்ணி லிருந்து உடனடியாக வெளியேறுவ தென்பது சாதாரண காரியமல்ல. சாதாரணமான மக்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், என்ன இயல்பு, எதிர்ப்போ அல்லது ஒரு கெடுபிடியோ ஏற்பட்டாலும் கூட சொந்த மண்ணை விட்டு அவர்கள் சுலபமாக வெளியேறுவ தென்பதை, மக்கள் அவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஆனால், 5 இலட்சம் மக்களும் பிரபா-கரனின் ஆணையை ஏற்று மறுதினமே குடும்பம் குடும்பமாக, குழந்தைகளுடன் வெறுங்கையுடன் யாழ் நகரை விட்டு வெளியேறினார்கள் என்று சொன்னால், சரித்திரத்திலேயே இப்படி ஒரு நிகழ்ச்சி கிடையாது.

செஞ்சீன வரலாற்றிலே ஒரு நிகழ்ச்சி யுண்டு. மாசேதுங் அவர்கள் சீனாவின் மத்திய பகுதியிலிருந்து மஞ்சூரியாவிற்கு பின் வாங்கினார். ஏனென்றால் சாங்கே சேக்கின் படைகள் அவரைச் சுற்றி வளைத்துக் கொள்ள முயற்சி செய்தபோது, 30,000 செஞ்சேனை வீரர்களுடன் மாசேதுங் பின்வாங்கிப் போனார். அவர்களுடன் அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சிலரும் சென்றார்கள். எனினும் மக்கள் வெளியேறவில்லை.

இராமாயணத்திலே இராமன் வனவாசம் புகுந்தபோது, அயோத்தி நகரிலே வாழ்ந்த மக்கள் இராமன் இருக்குமிடந்தான் அயோத்தி என்று அவனுக்குப் பின்னா லேயே வனத்திற்குச் சென்றார்கள். அதைப் போல, பிரபாகரன் எங்கு இருக்கிறாரோ, புலிகள் எங்கு இருக்கிறார்களோ அது தான் எங்களுக்கு யாழ்ப்பாணம் என்று நினைத்து 5 இலட்சம் மக்களும் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறினார்கள் என்பது உலக சரித்திரத்திலேயே இது தான் முதற் தடவை என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த நடவடிக்கையை பிரபாகரன் எடுத்த போது, அதை ஏளனம் செய்தவர்கள் எங்கள் நாட்டிலும் உண்டு. ஆகா... இத்துடன் புலிகளின் கதை முடிந்துவிட்டது. இனி அவர்களுக்கு எதுவுமில்லை என்றெல்லாம் நினைத் தார்கள், கொக்கரித்தார்கள். அவர்கள் தங்களுக்குள் தாங்களே மகிழ்ந்து கொண்டார்கள். ஆனால், பிரபாகரனின் இந்த இராஜதந்திரத்தால், சிங்கள இராணுவத்தின் அத்தனை நோக்கங்களும் முறியடிக்கப்பட்டன. ஆக, மொத்தம் இன்றைக்கு யாழ்ப்பாணத்திற்குள் புகுந்து விட்ட சிங்கள இராணுவம்தான் முற்றுகையிடப்பட்டது போல உள்ளது. அங்கிருந்து வெளியேறவும் முடியாமல், இருக்கவும் முடியாமல் தவிக்கிறது.

சிங்கள எதிர்க்கட்சித் தலைவர்கள் சொல்கிறார்கள், யாழ்ப்பாணத்தைப் பிடித்தது ஒரு முட்டாள்த்தனமான நடவடிக்கை என்று. அனுரா பண்டாரந-ாயக்கா என்ன சொன்னார், "படையினரால் யாழ்ப்பாணத்தைப் பிடிக்க முடிந்ததே தவிர, அங்கு வாழும் மக்களின் உள்ளங்களைப் பிடிக்க முடியவில்லை. தமிழ் மக்கள் முழுக்க, பிரபாகரன் பக்கம்தான் இருக்கிறார்கள் என்பதை அவர்களது ஒட்டுமொத்தமான வெளி யேற்றம் நிரூபித்துவிட்டது. யாழ்ப்பாணத் தைப் பிடித்தவுடன் யுத்தம் முடிந்து விட்டது என்று அனுருத்த சொல்வது உண்மையாக இருக்கும் என்று சொன்னால், ஜனாதிபதியின் அலரி மாளிகைக்கு முன்னாலே இன்னும் ஏன் தடை விதிக்க வேண்டும் என்று கேட்டார்.

இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்காவும் அதைத்தான் சொன்னார். காலங் காலமாக யாழ்ப் பாண...தை நெருங்க முடியாமல் இருந்த நாம், யாழ்ப்பாணத்தைப் பிடித்திரு க்கிறோம் என்று அரச தரப்பினர் கொக்கரிக்கிறார்கள். ஆனால், உண்மை என்ன? யாழ்ப்பாணத்தை நீங்கள் பிடிக்கப் போனதன் மூலம், ஏற்கனவே நம் வசமிருந்த கிழக்கு மாகாணத்தை முழு வதுமாக இழந்துவிட்டோம். ஆக அங்கு புலிகள் பரவி வேரூன்றிவிட்டார்கள். இது அரசாங்கம் செய்த முட்டாள்த்தனம். யாழ்ப்பாணத்தை நாம் பிடித்தாலும் அங்கு நிலைகொள்ள முடியாது. என்றைக்காவது வெளியேறவேண்டி இருக்கும். ஆனால் 30 ஆண்டு காலத்திற்கு மேலாகத் திட்டமிட்டு சிங்களவர்களை கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் குடியேற்றி இருந்தோம். அந்தக் குடியேற்றங்களெல்லாம் இன்று ஆபத்துக் குள்ளாகி இருக்கின்றன. எந்த நிமிடமும் அங்கு வாழுகிற சிங்கள மக்கள் வெளியேற வேண்டிய நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். இதற்குக் காரணம், அரசாங்கத்தின் முட்டாள்த்தனமான படை யெடுப்பு என்று அவர் சொன்னார்.

ஆக இவர்களின் நோக்கம் எதுவும் யாழ்ப்பாணத்தைப் பிடித்தது அல்லாமல் நிறைவேறவில்லை.

மூன்றாம் ஈழப் போருக்குப் பின்னால் ஏறத்தாழ 8 விமானங்களைச் சிங்கள இராணுவம் இழந்துள்ளது. கொழும்புத் துறைமுகத்திலே புலிகள் ஒரு அற்புதமான தாக்குதலை நடத்தி யிருக்கிறார்கள். இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 12ம் திகதியன்று மிகவும் பாதுகாப்பான கொழும்புத் துறை முகத்தை விடுதலைப்புலிகள் தாக்கி யுள்ளனர். இலங்கையின் சர்வதேசத் துறைமுகம் அது ஒன்றுதான்.

அந்தத் துறைமுகத்தில்தான் சர்வதேசக் கப்பல்கள் வந்து போய்க் கொண் டிருக்கின்றன. மேற்கு நாடுகளிலிருந்து கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களும் கிழக்கு நாடுகளிலிருந்து மேற்கு நாடுகளுக்குச் செல்கின்ற கப்பல் களும் அந்தத் துறைமுகத்திற்கு வந்து செல்வதன் மூலம், அந்நியச் செலாவணி இலங்கை அரசுக்கு ஈட்டிக் கொடுக்கப் படுகிறது. ஆகவே அதைச் சிங்களக் கடற்படையினர் முழுவதுமாக எச்சரிக் கையாக நின்று அதற்குப் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். இந்தச் சம்பவத்திற்குச் சில வாரங்களுக்கு முன்னால், சிங்கள இராணுவ அமைச்சர் அறிவித்தார், கொழும்புத் துறைமுகம் எப்போது மில்லாத வகையில் மிகவும் பாதுகாக் கப்படுகிறது என்று. ஆனால், கடற்புலிகள் அங்கே நுழைந்து ஆறு கப்பல்களைத் தகர்த்தார்கள். கொழும்புத் துறைமுகம் கடுமையாகச் சேதமாக்கப்பட்டது. 9 கடற்புலிகள் தங்களது உயிரைத் தியாகம் செய்ததன் மூலம், இந்த மகத்தான காரி-யத்தைச் செய்து முடித்தார்கள்.

> இராமாயணத்திலே இராமன் வனவாசம் புகுந்தபோது, அயோத்தி நகரிலே வாழ்ந்த மக்கள் இராமன் இருக்குமிடந்தான் அயோத்தி என்று அவனுக்குப் பின்னாலேயே வனத்திற்குச் சென்றார்கள். அதைப் போல, பிரபாகரன் எங்கு இருக்கிறாரோ, புலிகள் எங்கு இருக்கிறார்களோ அதுதான் எங்களுக்கு யாழ்ப்பாணம் என்று நினைத்து 5 இலட்சம் மக்களும் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறினார்கள் என்பது உலக சரித்திரத்திலேயே இதுதான் முதற் தடவை என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இது ஒன்றும் சாதாரண விடயமல்ல. 1941ஆம் ஆண்டு உலகப் போர் நடை-பெற்ற காலத்தில் அமெரிக்கா போரிலே இறங்கவில்லை. ஆனால், பிரிட்டனுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்தது என்ற காரணத்தினாலே கோபம டைந்திருந்த யப்பானியர், அமெரிக்கக் கடற்படைத் தளமான பேர்ள் துறை முகத்தைத் தாக்குவதற்குத் திட்ட மிட்டார்கள். ஏறத்தாள 350 யப்பானிய விமானங்கள், 6 விமானந்தாங்கிக் கப்பல்கள், பல நீர்மூழ்கிக் கப்பல்கள், நாசகாரிக் கப்பல்கள் இவற்றுடன் அன்றைக்கு யப்பானியர் இரகசியமாக இரவோடிரவாக அவர்களுடைய படை யெடுப்பைத் தொடங்கினார்கள். இதில் ஒரு அற்புதமான ஒற்றுமை என்ன வென்று சொன்னால், அன்றைக்கு யப்பானியர் பேர்ள் துறைமுகத்தைத் தாக்குவதற்கு அவர்கள் மேற்கொண்ட இந்த இராணுவ நடவடிக் கைகளுக்கு அவர்கள் இட்டிருந்த பெயர் என்ன வென்றால் "டோரா டோரா டோரா" என்பது. டோரா என்று சொன்னால் யப்பானிய மொழியிலே புலி என்று அர்த்தம். "புலி, புலி, புலி" என்றுதான் அன்றைக்கு அந்தப் போர் நடவடிக்கைக்கு யப்பானியர்கள் ஒரு நாம-கரணம் செய்திரு ந்தார்கள். 350 யப்பானிய விமானங்கள், விமானந்தாங்கிக் கப்பல்கள், நீர் மூழ்கிக் கப்பல்களுடன் பல்லாயிரக் கணக்கான யப்பானியர் சென்று அந்தப் பேர்ள் முகாமைத் தாக்கி ஏறத்தாள 9 அமெரிக்க இராணுவக் கப்பல்களைத்தான் அழித்தார்கள்.

தொடரும்...

www.tamilarangam.net



# "தமிழீழத்துக்கு எதிராக இருக்கின்றவர்கள் நிச்சயமாக தமிழராக இருக்க முடியாது"

- டாக்டர் ச. ராமதாஸ்- நிறுவனர், பாட்டாளி மக்கள் கட்சி

கடந்த ஆகஸ்ட் மாதம் 31ந் திகதி ரொறன்ரோவில் நடைபெற்ற உலகத்தமிழர் இயக்கத்தின் 10 வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்ட பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ச. ராமதாஸ் அவர்களும்,



பேராசிரியர் தீரன்

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினருமான தீரன் அவர்களும் ஆற்றிய உரைகள் இங்கே தரப்பட்டுள்ளன.

டாக்டர் ராமதாஸ்

இங்கு கனடா நாட்டைப்பொறுத்தவரை

"இங்கிருக்கின்ற உங்களுக்கு நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. உணர்வோடு இருக்கின்றீர்கள். இந்த உணர்வு மேலும் மேலும் பெருகி, உலகத்தில் இருக்கின்ற 8 கோடி தமிழர்களும், மனத்தளவிலேயாவது ஈழத் தமிழகம் மலர்வதற்குப் பாடுபட வேண்டும். அதற்காக நாங்களும் எங்களால் முடிந்தளவு பாடுபடுவோம்"

நிலை. இன்னும் ஒரு இரண்டு மாதம் போனால், நயாகரா நீர்வீழ்ச்சி ஓடாமல் அது உறைந்து போகுமென்று சொல்லுவார்கள். அந்த நிலைமிலேதான் தாய்த் தமிழ்நாட்டு மக்கள் இன்று இருக்கிறார்கள். அதற்கான காரணங்களைச் சொல்ல இங்கு நேரமில்லை.

ஆனாலும் கூட, தாய்த் தமிழ் நாட்டில் இருக்கின்ற மக்களுக்குச் சூடேற்றுகின்ற வேளையிலே அப்போது அது அருவியாக ஓடும் என்பதினாலே அந்த வேலையிலே நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை ஓட்டுப் பொறுக்குகின்ற கட்சி என்றாலும் கூட, ஓட்டுப் பொறுக்குவதைத் தடை செய்யாது அதை நாங்கள் வைத்திருக்கின்றோம். இன்றைக்கு, தமிழீழத்திற்கு எதிராக இருக்கின்றவர்கள் நிச்சயமாக

அப்போதுதான் நாங்கள் சொன்னோம், 7 வருடம் சிறையிலே போட்டாலும் 70 வருடம் சிறையிலே போட்டாலும் என் மகன் வருவான், அதற்குப் பின்னால் என் பேரன் வருவான் என்று சொன்னேன்.

இது தமிழகத்திலே எல்லாப் பத்திரிகையிலும் வந்த செய்தி. அதனாலே, "இங்கிருக்கின்ற உங்களுக்கு நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. உணர்வோடு இருக்கின்றீர்கள். இந்த உணர்வு மேலும் மேலும் பெருகி, உலகத்தில் இருக்கின்ற 8 கோடி தமிழர்களும், மனத்தளவிலேயாவது ஈழத் தமிழகம் மலர்வதற்குப் பாடுபடவேண்டும். அதற்காக நாங்களும் எங்களால் முடிந்தளவு பாடுபடுவோம்" என்று கூறி என்னுடைய இந்த சிற்றுரையை முடிக்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

மினுடைய எங்கள் இயக்கத்தைச் சார்ந்த மகளிர் அணியினர், இன்றைக்கு, தமிழீழத்திலே சிங்கள இராணுவத்தினருடைய கொடுமைகளுக்கு ஆளாகி



டாக்டர் ராமதாஸ்

மூன்றாவது முறையாக, இடம்பெயர்ந்து கொண்டிருக்கிற – வாழ வழியில்லாமல் தத்தளித்துக்கொண்டிருக்கின்ற, ஈழத் தமிழ் மக்களுடைய துயர் களையப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, உறங்கிக் கொண்டிருக்கின்ற மத்திய, மாநில அரசுகளைத் தட்டி எழுப்ப வேண்டும் என்பதற்காகச் சுமார் 300க்கு மேற்பட்டவர்கள் சாகும் வரை உண்ணா

# "ஒரு தமிழன் இன்னொரு தமிழனுக்கு குரல் கொடுப்பது தவறென்று சொன்னால் அதைத் தொடர்ந்து செய்துகொண்டே இருப்போம்"

-பேராசிரியர் தீரன், தலைவர், பாட்டாளி மக்கள் கட்சி

உண்மையிலேயே இந்த அரசுக்கு நன்றி சொல்லுகின்றேன். இந்த அரசைப் பாராட்டுகின்றேன். புலம் பெயர்ந்த தமிழர்கள் இன்று மானத்தோடும் மரியாதையோடும் கண்ணியத்தோடும் நடத்தப்படுகின்றார்கள் என்பதைக் கேட்கும்போது, உண்மையிலேயே எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. என்றென்றைக்கும் இந்த நாட்டிற்கு ஒட்டுமொத்தமாக தமிழ் மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டிற்கு முதன்முறையாக நான் வந்திருக்கிறேன். உங்களைப் பார்க்கும் பொழுது பல உணர்வுகளை நான் பெறுகிறேன். "தமிழீழம் மலர வேண்டும்" என்ற உங்களுடைய உணர்வுகளை நிச்சயமாகத் தாய்த் தமிழகத்திற்குக் கொண்டு சென்று இதை மேலும் அங்கு பரப்புவேன் என்று உறுதியளிக்கிறேன்.

நீங்கள் கேட்கின்ற கேள்வி, ஒவ்வொருவரும் என்னைப் பார்க்கின்ற பொழுது கேட்கின்ற கேள்வி தாய்த் தமிழகத்திலே நிலைப்பாடு என்ன என்று கேட்கின்ற

தமிழராக இருக்க முடியாது என்பதிலே எந்தவித சந்தேகமும் இல்லை.

ஒரே ஒரு ஆள், "நான் தமிழீழத்துக்கு எதிராக வந்திருக்கிறேன்" என்று சொன்னால், அவன் நிச்சயமாக தமிழனாக இருக்க முடியாது. அந்த வகையிலே, இன்றைக்கு உலக தமிழர்களுக்கெல்லாம் தலைவராக விளங்குகின்ற பிரபாகரன் நிச்சயமாகத் தமிழீழத்தைப் பெற்றுத் தருவார் என்பதிலே எந்தவித சந்தேகமும் இல்லை.

அந்த வகையிலே, எங்கள் கட்சியைப் பொறுத்தவரை, எங்கள் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்று இதற்கு முன்னாள் ஆண்ட ஒரு பெண்மணி, அந்தப் பெண்மணி யார் என்று உங்களுக்குத் தெரியும். சென்னைச் சட்டமன்றத்திலே, எங்கள் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்று, ஒரு தீர்மானமே கொண்டுவந்து நிறைவேற்றினார்கள்.

சென்னை சட்டமன்றத்திலே எங்கள் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்று, நாங்கள் கவலைப்படவில்லை.

-பேராசிரியர் தீரன்

இன்றைக்கு இந்த அரங்கிலே நான் பேசுகிறபொழுது, தமிழகத்திலே, என் இயக்க மக்களோடு நின்றுகொண்டு, பேசுகிறதைப்போல ஒரு உணர்வை நான் இங்கு பெற்றுக் கொண்டிருக்கிறேன். காரணம், கடந்த 12ந் திகதி இந்த அரங்கத்திலே நீங்கள் பல பேர்கள் மஞ்சள் – சிவப்பு ஆடைகளை அணிந்து கொண்டு எப்படி இந்தக் கூட்டத்திலே சிறப்பித்துக் கொண்டிருக்கிறீர்களோ, அதேபோல பாட்டாளி மக்கள் கட்சி

இன்றைக்கு இந்த அரங்கிலே நான் பேசுகிறபொழுது, தமிழகத்திலே, என் இயக்க மக்களோடு நின்று கொண்டு, பேசுகிறதைப்போல ஒரு உணர்வை நான் இங்கு பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

விரதம் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இந்த மஞ்சள் – சிவப்பு புடவைகளையும், ரவிக்கைகளையும் அணிந்து கொண்டு அவர்கள் சென்னை குறளகத்தின் எதிரே, ஒரு சத்திய விரதம் மேற்கொண்டிருந்த பொழுது, அதனைத் தொடக்கி வைக்கின்ற ஒரு வாய்ப்பை என்னுடைய இயக்கம் தந்ததை, நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்திப் பார்க்கின்றேன். ஆக அந்த இடத்திலே நின்றுகொண்டு எந்த உணர்வோடு பேசினேனோ, அதே உணர்வோடு இன்றைக்கு, உங்கள் முன்னாலே இந்தக் கூட்டத்திலே நின்றுகொண்டு பேசுவதிலே, நான் பெருமைப்படுகிறேன் – மகிழ்ச்சியடைகிறேன். பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தளவிலே நாங்கள் வெகுமக்கள் இயக்கத்தை அணி திரட்டத் தொடங்கிய அரசியல் கட்சியை 1989 லேதான் தொடங்கினோம்.

(தொடரும் ... )

# தாயகம்நோக்கிய ....

மார்க் ஒருவரிலிருந்து ஒருவருக்குத் தனிப்பார்வையைச் செலுத்தினான். இவர்கள் இப்போதுதான் சந்தித்துவிட்டு இப்படிச் சொல்லாடுவது பற்றி வியந்தான். தானும் இப்படிப் பலமுறை செய்திருப்பதை நினைத்துக் கொண்டான்.

கிற்றி தன் இயல்பை வெளிக்காட்டியதால் நிச்சயமாக அரி அவளை ஒன்றில் வெறுப்போடு அல்லது விருப்போடு நோக்கக் கூடும்.

"அது தர்க்க ரீதியாக உனக்குத் தோன்றாதது எனக்கு வியப்பாகிறது: ஹீப்ரூ நிரம்பவே தர்க்கரீதியாக இருந்ததால்தான் கடவுள் வேதாகமத்தை ஹீப்ரூ மொழியில் எழுதவைத்தார்" என்றான் அரி பதிலாக.

கிற்றி புன்னகைத்துக் கொண்டே ஆமெனத் தலையசைத்தாள். இசைக்குழு, இசையின் வேகத்தை 'பொக்ஸ் ட்ரொட்' (Fox Trot) எனப்படும் வேக லயத்துக்கு மாற்றியது.

"நாம் நடனமாடுவோமா திருமதி. பிறமெனற்" அரி அழைத்தான்.

மார்க் சாய்ந்து கொண்டே, அரி கிற்றியை நடன தளத்துக்கு அழைத்துச் சென்று, அணைத்துப் பிடித்தபடி சீராக, மென்மையாக வழுக்கியபடி, நடன அசைவுகளில் அவளை அழகாக வழிநடத்திச் செல்வதை அவதானித்தான்.

(தொடரும் ... )


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# முல்லைச் சமர் : நாடாளுமன்றில் ரத்வத்தவின் விளக்கம்!

**08-08-96 அன்று சிறிலங்காவின் நாடாளுமன்றத்தில் பாது காப்புப் பிரதியமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள்.**

**1985**ஆம் ஆண்டு பெரிதாக விஸ்தரிக்கப்பட்ட முல்லைத்தீவுத் தளம் ஆமிரத்துத்தொளாயிரத்து எழுபதுகளின் ஆரம்பத்தில் நிறுவப்பட்டது. 'ஈழப்போர்–2' இன் காலப்பகுதியில் புலிகள் இந்தத் தளம்மீது பல தடவைகள் தாக்குதல்



தொடுத்தனர். அப்போதெல்லாம் உதவிப் படைவரும்வரை அங்கிருந்த படையினர் தளத்தைப் பாதுகாத்தனர்.

நிலரீதியாக முல்லைத்தீவுத் தளம் தனிமைப்பட்டுக்கிடந்தது. ஐ.தே.கட்சி அரசாங்கத்தால் இந்தத் தளம் விரிவாக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டது.

இந்த இராணுவத்தளத்தின் தற்போதைய ஆட்பலம் 1407 ஆகும். இதில் இராணுவம், கடற்படை, பொலிஸ் என்பனவை அடங்கும் அத்துடன் நிர்வாக வேலைகளுக்காகவும் மற்றும் சிறுசிறு வேலைகளுக்காகவும் 81 சிவிலியன்களும் வேலை பார்த்தனர். ஆட்களின் விபரம் வருமாறு.

| | |
|---|---|
| இராணுவம் | 1268 |
| பொலிஸ் | 42 |
| கடற்படை | 05 |
| சிவிலியன்கள் | 81 |

இரண்டு பிரிகேட்கள் தளத்தில் நிலைகொண்டிருந்தன. சிங்க ரெஜிமென்டின் 9ஆவது படைப்பிரிவும், விஜயபாகு ரெஜிமென்டின் 6ஆவது படைப்பிரிவும் அவையாகும்.

ஆடி 18 அதிகாலை சுமார் 1.30 மணியளவில் தளத்தின் வடக்கு மற்றும் தெற்குப் புறங்களில் இருந்த வெளிப்புறப் பாதுகாப்பு அரண்கள் (F.D.L) தாக்குதலுக்குள்ளாகின. அன்றைய தினம், தளத்தின் பிரதம தளபதி அங்கே இருக்கவில்லை. அதுபோல சிங்க ரெஜிமெண்டின் கொமாண்டரும் அங்கில்லை. எனவே விஜயபாகு ரெஜிமெண்டின் கட்டளை அதிகாரியான மேஜர் அலிபா அதன் பொறுப்பை ஏற்கவேண்டியதாயிற்று. தளத் தைப்பாதுகாக்க அவர் நடவடிக்கை எடுத்ததுடன், மேலதிகாரிகளுக்கு அறிவித்தார்.

சொற்பநேரத்தில் முப்படைத்தளபதிகளும் தயாராகினர். எதிரிக்கெதிரான ஒரு கூட்டு நடவடிக்கைக்குரிய அறிவுறுத்தல்களை அவர் வழங்கத்தொடங்கினார்.

அதிகாலை சுமார் 2.00 மணியளவில் இராணுவத்தளபதியும் அவரது உயர்நிலை அதிகாரிகளும் தளத்திற்கு உதவும் முன்னேற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினர். அதிகாலை மூன்று மணியளவில் வெலிஓயா கொமாண்டர் "ஆட்டிலறி" குண்டுத்தாக்குதலைத் தொடக்கி முல்லைத்தளப்படையினருக்கு உதவினார்.

அந்நேரம் வெற்றிலைக்கேணியில் இருந்து கடற்கலங்களான பராக்கிரமபாகு, ரணசிறியுடன் ரோந்துக்கலமொன்றும் முல்லைத்தளத்திற்கு உதவ விரைந்தன.

இந்தக்கட்டத்தில், தளப்பாதுகாப்பின் முதலாவது வேலி புலிகளால் தகர்த்தெறியப்பட்டுவிட்டது. அத்துடன் முதலாம் இரண்டாம் வேலிகளுக்கு இடைப்பட்ட பகுதியும் புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

3.11 மணியளவில் பல வான்கலங்கள் போர்முனைக்கு வந்தன. புலிகள்மீது குண்டு வீசத்தொடங்கின. அதேசமயம் கடற்படையும், கடற்புலிகளும் மோதினர்.

மதுறுஓயாப் பகுதியில் சில இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவெனத் தனித்து நின்ற விசேடபடைப்பிரிவை அனுராதபுரம் கொண்டு செல்லும்படி அதிகாலை 4.30 மணிக்கு உத்தர விடப்பட்டது.

அதிகாலை 5.30 மணியளவில் முல்லைத்தீவுத் தளத்துடனான தொலைத்தொடர்பு முற்றாக அறுந்தது. தளத்தினுள் இருந்த தொலைத்தொடர்புக் கோபுரம் சேதமாக்கப்பட்டதையே இது காட்டியது.

ஆயினும் காலை 7.00 மணியளவில் தளத்தினுள் இருந்த கருவிகளின் துணையுடன் மீண்டும் தொடர்பு ஏற்பட்டது.

7.17 ற்கும் 8.25 ற்கும் இடையில் நான்கு விமானங்கள் புலிகள் மீது தாக்குதலை நடாத்தின. முல்லைத்தளப் படை யினருக்கு உதவவென உதவிப்படை யனுப்பும் வகையில் முன்னேற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

உலங்கு வானூர்திகள் மூலம் உதவிப்படையைத் தரையிறக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மதுறு ஓயாவிலிருந்து அனுராதபுரம் கொண்டுசெல்லப்பட்ட படையினர் அங்கிருந்து உலங்குவானூர்திகள் மூலம் எடுத்துச்செல்லப்பட்டு 18ம் திகதி 2.20 மணியளவில் முல்லைத்தளத்தின் தென்புறத்தில் தரையிறக்கப்பட்டனர். தரையிறக்கத்தின் போது, படையினர் பலத்த எதிர்த்தாக்குதலை சந்தித்தனர். இதில் 37 படையினர் இறந்தனர். 60பேர் காயமடைந்தனர். இதனால் வான்வழித் தரையிறக்கத்திற்கான இரண்டாவது முயற்சியைத் தாமதப்படுத்தவேண்டி வந்துவிட்டது.

ஆயினும் நான்கு மணிநேரம் கழித்து 8.30 மணியளவில் இரண்டாவது தொகுதிப்படையினர் உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்டனர்.

அன்றையதினம் (18ம் திகதி) மாலை நடந்த சண்டையில் 100 புலிகள் பலியாகினர் என புலிகளின் தொடர்பு சாதனத்தை ஒட்டுக்கேட்டபோது தெரிந்தது.

தரைப்படையின் நகர்வுக்கு கடற்படை உதவியது. 18ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் காங்கேசன்துறையில் இருந்து ஒரு பட்டாலியன் படையினரை ஏற்றிக்கொண்டு கடற்படை முல்லைத்தீவு நோக்கிச் சென்றது. இவர்களைத் தரையிறக்க கடற்படை பலதடவைகள் முயன்றது. ஆனால் கடும் எதிர்த்தாக்குதல் காரணமாக இது நடைபெறவில்லை.

19ம் திகதியும் பலதரையிறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றுமாலை 4.30 மணியளவில் ஒரு தரையிறக்கத்துக்கு கடற்படை முயற்சித்தது. அப்போது கடற்புலிகளின் தற்கொலைப்படகுகள் "ரணவிரு" என்ற எமது பீரங்கிக்கப்பலைத் தாக்கின. மாலுமிகளுடன் "ரணவிரு" மூழ்கியது. அத்துடன் கடற் கொந்தளிப்புக் காரணமாகத் துருப்புகளின் தரையிறக்கம் மேலும் சிக்கலடைந்தது.

இதேவேளை, உதவிப்படைக்கான படையினரைப் பல்வேறு இடங்க ளிலிருந்து ஒன்று சேர்க்கும் பணியில் வான்படை விமானங்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. அன்று (19ம் திகதி) இரவும் பகலும் பல தரையிறக்கங்கள் நடந்தன. 3.30 மணியிலிருந்து 6.00 மணிக்குள் நடந்த கடற்சண்டையில் கடற்புலிகளின் படகுகள் பல அழிக்கப்பட்டன.

20ம் திகதி மேலுமொரு தொகு திப்படையினர் வான்வழியாகத் தரையிறங்கினர். இந்த முயற்சியின்போது நடந்த சண்டையில் எம்.ஐ–17 உலங்குவானூர்தி ஒன்று சேதமடைந்தது. தரையிறக்கப்பட்ட துருப்புக்களின் பலர் காயமடைந்தனர். அன்று மாலையே காயப்பட்டவர்கள் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

கடல்மூலமான தரையிறக்கத்திற்குக் கடற்புலிகள் பெருந்தடையாக இருந்த போது அவர்களின் படகுகள் மீது வான்படையினர் தாக்குதல்களை நடாத்தி 80 அல்லது100 படகுகளை அழித்தனர்.

21ம் திகதி மேலும் ஒரு தரையிறக்கத்திற்கு கடற்படை முயன்றது. முதல்நாள் வான்தாக்குதல்களின் விளைவுகள் காரணமாக கடற்புலிகளின் எதிர்ப்பு மிகவும் குறைந்திருந்தது.



தொடர்ச்சி 9ம் பக்கம்...

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உண்மை என்ன?

# அனுருத்தவின் அறிக்கை மீது ஒரு நோக்கு

கைதட்டல்கள் – கிரீடம் சூட்டல்களின் துணையுடன், 'ரிவிரச' வின் வெற்றியை, பண்டைக்காலச் சம்பிரதாயங்களுடன் – நாடாளுமன்றில் கொண்டாடிய ஜெனரல் ரத்வத்த, கிண்டல்கள் – கேள்விகள் புடைசூழ, முல்லைத்தீவுத் தோல்வியை – அதே நாடாளுமன்றில் வைத்து – அறிவிக்கும் 'வலி' மிகுந்த பணியையும் தானே செய்ய வேண்டியதாயிற்று!

முல்லைத்தீவுப் படையினருக்கு என்ன நடந்தது என்ற கேள்விகளுக்கு விடைகூறும் சாட்டுடன், அப் பெருந்தோல்வியை நியாயப்படுத்தும் வகையில், ரத்வத்தவின் நாடாளுமன்றப் பேச்சு அமைந்திருந்தது.

**'நடவடிக்கையில் கொல்லப்படுதல்', 'நடவடிக்கையில் காணாமற்போதல்'** என்ற இரண்டு இராணுவ விதிகள் உலகநாடுகள் அனைத்திலும் உண்டு.

இந்த இராணுவ மரபை, படையினரின் உயிரிழப்பை மறைக்கும் ஒரு தந்திரத்திற்காக, ரத்வத்த பிழையாகப் பயன்படுத்தியுள்ளார்.

முல்லைத்தீவுத் தளத் தாக்குதலில் 83 படையினர் மட்டுமே பலியானர்கள் என்றும், மிகுதிப்பேர் காணாமல் போனோராகவே கருதப்படுவர் என்றும் அவர் அறிவித்துள்ளார். அதற்குச் சில சட்ட நியாயங்களும் கூறியுள்ளார்.

ஐ.சி.ஆர்.சியினரிடமும், சிறிலங்கா அரசாங்க அதிபர்களிடமும் புலிகள் ஒப்படைத்த 626 படையினரது சடலங்களை, மேற்குறித்த சட்ட நுணுக்கங்களைச் சுட்டிக்காட்டி, ரத்வத்த தட்டிக்கழித்து விட்டார்!

ஏறக்குறைய 1200 இற்கு மேலான படையினர் கொல்லப்பட்டுவிட்டனர் என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் திராணி, ஜெனரல் ரத்வத்தவிற்கும் அவரது அரசாங்கத்திற்கும் இல்லை என்பதே உண்மையாகும்.

ஆடி 18ஆம் திகதி அதிகாலையிலிருந்து, முல்லைத்தீவு படைத்தளத்தில் உள்ளேயும் வெளியேயும் என்ன நடந்தது என்ற விபரத்தை ரத்வத்த அவர்கள் பட்டியலிட்டு நாடாளுமன்றத்தில் அறிவித்தார். திகதி – நேரம் – சம்பவம் என்பவற்றை விலாவாரியாகக் குறிப்பிட்டு, படைத்தளத்தைப் பாதுகாக்கத் தாம் எடுத்த நடவடிக்கைபற்றி விளக்க மளித்தார்.

ஆயினும், இந்த விளக்கங்களின் நோக்கம் முல்லைத்தீவில் என்ன நடந்தது என்பதைக் கூறுவதாக இருக்கவில்லை. மாறாக, இந்த இராணுவத் தோல்வியைப் பயன்படுத்தி ஐ.தே.கட்சியினர் அரசியல் இலாபம் ஈட்டிவிடாது தடுக்கும் நோக்குடனேயே, ரத்வத்தவின் விளக்க வுரை அமைந்திருந்தது.

பூநகரி கூட்டுத்தளம் தாக்கப்பட்டபோது, அதற்கான எதிர் நடவடிக்கையை எடுக்க, முன்னைய அரசுக்கு 72 மணிநேரம் எடுத்தது என்று ஐ.தே.க.வினரைக் குற்றஞ்சாட்டிய ரத்வத்த அவர்கள், தனக்கு 15 நிமிடங்களே எடுத்தது எனத் தம்பட்டம் அடித்தார்.

ஆனால், ஜெனரல் ரத்வத்தவும் முப்படைத்தளபதிகளும் அவ்வளவு விரைவாக ஒன்று சேர்ந்து – முப்படைகளின் ஆயுத வளங்களையும் ஒன்று திரட்டி, புதிய நடவடிக்கையைத் திட்டமிட்டு வழிநடாத்தியும் முல் லைத்தீவுத் தளத்தைப் பாதுகாக்க அவர்களால் இயலவில்லை என்ற



இராணுவ யதார்த்தம், ரத்வத்தவின் உரையில் புதைந்து கிடக்கின்றது.

**"முல்லைத்தீவுத்தளம் நில ரீதியாகத் தனிமைப்பட்டுக் கிடந்தது"** என்று, அதன் வீழ்ச்சிக்கு ரத்வத்த காரணம் ஒன்று கற்பித்துள்ளார்.

முல்லைத்தீவு மட்டுமல்ல, எல்லையோரம் தவிர்ந்த வடபுலப் படை முகாம்கள் அனைத்துமே, சிங்கள தேசத்திலிருந்து நிலரீதியாகத் தனிமைப்பட்டே கிடக் கின்றன. குடாநாடாக இருந்தாலும் சரி, மன்னாராக இருந்தாலும் சரி, தீவகமாக இருந்தாலும் சரி அவ்விதமே உள்ளன. இந்தப்படைத்தளங்கள் அல்லது படை வலயங்களுக்கான தொடர்பு கடலும் வானும்தான்.

ஆனால், உண்மை யாதெனில் சிங்கள தேசத்தின் தற்போதைய கடற்பலத்தைப் பொறுத்தவரை, அதன் கடற்தொடர்பு என்பது அதற்கு நிலத்தொடர்பைப் போன்றதே ஆகும். இந்தக் கடற்பலத்தை – கடற் தொடர்பை நம்பித்தான் வடபுலப் படைகளின் இருப்புத் தங்கியுள்ளது.

எனவே, முல்லைத் தளம் நிலரீதியாகத் தனிமைப்பட்டுக் கிடந்ததால்தான் அதற்கு அந்தக் கதி ஏற்பட்டது என்றவாறு – மறைமுகமாக – தோல்வியை நியாயப்படுத்த முயன்றமை பொருந்தாத ஒரு காரணமாகும். இது போன்றே, முல்லைத் தளம் காட்டுக்குள் உள்ளது என்ற ஒரு பொய்யான கருத்தையும் சிங்கள அரசு உருவாக்கியது. காட்டிற்குள் புலிகள் பலமாக இருக்கின்றார்கள். எனவே, புலிகளின் பலமான கோட்டைக்குள் இருந்த அந்தப் படைத்தளத்தைப் புலிகள் தாக்கிவிட்டனர் என்று எண்ணவைப்பதன் மூலம், அந்த இராணுவத் தோல்வியின் பரிமாணத்தைத் திரிக்க முயன்றனர்.

தரையிறக்கங்களின் போது படைத்தரப்பு பட்டபாடு, ரத்வத்தவின் அறிக்கையில் வெளிப்பட்டது. கடற்புலிகளின் செயற்திறனை அவர் மறைமுகமாகப் பாராட்டியுள்ளார். ஆனால், தரை யிறக்கத்தின் போது நடந்த சண்டைகளில் புலிகள் இயக்கத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை அவர், – வழமை போலவே – மிகைப்படுத்திக் காட்டியுள்ளார்.

**"18ம் திகதி மாலை நடந்த சண்டையில் 400 புலிகள் பலியாகினர்."** என்று ஒரு படுபொய்யைக் கூறியுள்ளார். அது போல, **"கடற்புலிகளின் 80அல்லது 100 படகுகள் அழிக்கப்பட்டன."** என்ற கற்பனைக் கணக்கினையும் அந்த அறிக்கையில் காட்டியுள்ளார். தனது கடல் இழப்பைச் சமப்படுத்த இந்தப் பொய்யை ரத்வத்த கூறவேண்டி வந்துவிட்டது.

'ரணவிரு' பீரங்கிக்கப்பல் மூழ்கடிக் கப்பட்டதுடன் தரையிறக்கம் சிக்கலைச் சந்தித்து விட்டது என்பதை ஒப்புக்கொண்ட ரத்வத்த, "அத்துடன் கடற்கொந்தளிப்புக் காரணமாக தரையிறக்கம் மேலும் சிக்கலடைந்து விட்டது" என்று காலநிலைப் பொய் ஒன்றையும் உதிர்த்து தமது இயலாமையை மூடிமறைக்க முயன் றுள்ளார். முல்லைத்தீவுக் கடல் இப்போது அமைதியாகவே உள்ளது. தாக்குதல் நாட்களிலும் அமைதியாகவே இருந்தது. மாரிகாலத்தில்தான் இந்தப் பகுதிக் கடல் அலையெறிந்து கொந்தளிக்கும்.

"கடற்புலிகளுடன் இயற்கையும் தரையி றக்கத்திற்கு குறுக்கே நின்று விட்டது." நாம் என்ன செய்ய முடியும் என்ற பாணியிலேயே, ரத்வத்தவின் உரை இருந்தது. ஆனால், இயற்கை குறுக்கே நிற்கவில்லை. தரையிலும் கடலிலும் புலிகள்தான் தரையிறக்கத்திற்கு குறுக்கே நின்றார்கள்.

சிறலங்கா நாடாளுமன்றில் நீண்ட நேரம் உரையாற்றியபோதும் தரையிறக்கப்பட்ட உதவிப்படை தனது இலக்கை அடைய முடியாது இழப்புகளுடன் பின்வாங் கிச்சென்ற கதையை ரத்வத்த கூறவில்லை.

ஆயினும், மர்மக்கதைப் பாணியில் ஒளித்து மறைத்து அந்தப் பின்வாங்கலைக் கூறவேண்டிய நிலையில் அவர் இருந்தார்.

அவர்.......

" 26ஆம் திகதி ஆனையிறவுப் படைத்தளத்தில் இருந்து தொடங்கிய 'சத்ஜெய'வில் முல்லைத்தீவுக்கு உதவிப்படையாக அனுப்பப்பட்ட விசேட படையும் பங்குபற்றியது" என்று, ஒரு சூசக வாக்கியத்தை உதிர்த்தார். முல்லைத்தீவில் தரையிறக்கப்பட்ட விசேட படை எப்படி ஆனையிறவுக்கு வந்தது? ஏன் வந்தது என்ற விபரம் ரத்வத்தவின் உரையில் இல்லை.

தரையிறக்கப்பட்ட படை 26ஆம் திகதி கடல்வழியாக ஒரு அவசரப் பின்வாங்கலைச் செய்தது. அதன்போது, பல ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் போட்டுவிட்டு "உயிர்தப்பினால் போதும்" என்று, ஓடியமை படைத் தளபதிகளைக் கவலைக்குள்ளாக்கியிருக்கும். இந்த இராணுவ நிகழ்ச்சிபற்றி, ரத்வத்த தனது உரையில் எதுவுமே குறிப்பிடவில்லை.

முல்லைத்தீவுத் தோல்வியிலிருந்து சிங்கள மக்களின் கவனத்தைத் திசை திருப்பிவிடுதல் என்பதே "சத்ஜெய' இராணுவ நடவடிக்கையின் அரசியல் நோக்கமாகும்.

அதேவேளை, ஆனையிறவில் இருந்து ஒரு தரைப்பாதை அமைக்கும் திட்டமும் – அது சாத்தியமோ இல்லையோ! – அரசிடம் இருந்தது.

கிளிநொச்சியை இலக்காகக் கொண்ட 'சத்ஜெய'–1 பரந்தனை விட்டு நகர முடியவில்லை. ஆனால், "கிளிநொச்சி நோக்கிப் படைகள் நகர்ந்து கொண்டிருப்பதாக" நாடாளுமன்றில் ரத்வத்த பொய் கூறினார்.

ஆவணி 8ஆம் திகதி நாடாளுமன்றில் ரத்வத்த உரையாற்றியபோது, பரந்கனில் வைத்துப் படையினர் தடுத்து நிறுத்தப்பட்டு பலநாட்கள் கழிந்து விட்டன. ஆயினும் "கிளிநொச்சி நோக்கிப் படையினர் முன்னேறுகின்றனர்" என ரத்வத்த துணிந்து பொய் கூறினார்.

இந்தப் பொய், கிளிநொச்சி நோக்கிய நகர்வுடன் நின்றுவிடவில்லை. அங்கி ருந்து வவுனியாவுடன் ஒரு தரைப்பாதை அமைக்கும் வேலை தொடங்கப்பட்டு விட்டது போன்றதொரு அபிப்பிராயத்தை உருவாக்கும் அடுத்த பொய்யும் கூறப்பட்டது.

**"முல்லைத்தீவுத் தளத்தை ஏன் மீண்டும் கைப்பற்றவில்லை?"** என்ற ஐ.தே கட்சியினரின் கேள்விக்கு –இந்த அடுக்குப் பொய்களை அடித்தளமாக வைத்து ஒரு காரணமும் கூறப்பட்டது.

"தரைப்பாதை திறக்கப்பட்டால் முல்லை த்தீவுத் தளம் அங்கிருக்க வேண்டிய தேவை இல்லாது போய்விடுகின்றது." என்பதே அந்தக் காரணமாகும். அதாவது, கடற்பாதைக்கான பாதுகாப்பை முல்லைத்தளம் வழங்கி வந்தது. தரைப்பாதை திறந்தால் கடற்பாதை தேவையில்லை எனவே முல்லைத் தளம் தேவையில்லை.

நாடாளுமன்றில் வைத்து பொய்மேல் பொய்களை ரத்வத்த கூறியது ஆச்சரியப்படவேண்டிய விடயமல்ல. இந்தப் பொய்களை சிங்களமக்கள் அமைதியாக செவிமடுத்தார்கள் என்பதே ஆச்சரியமான விடயமாகும்.

"முல்லைத்தீவுச் சம்பவத்தை ஒரு இராணுவ இழப்பாக நாம் கருதவில்லை" என்ற கருத்தையும் ரத்வத்த கூறினார். இதற்கு ரத்வத்த கூறியகாரணம்.......

"இந்தச்சமரில் புலிகள் தரப்பில் கொல்லப்பட்டவர்கள் –

தொடர்ச்சி 9ம் பக்கம்...

நாடாளுமன்றில் வைத்து பொய்மேல் பொய்களை ரத்வத்த கூறியது ஆச்சரியப்படவேண்டிய விடயமல்ல. இந்தப் பொய்களை சிங்களமக்கள் அமைதியாக செவிமடுத்தார்கள் என்பதே ஆச்சரியமான விடயமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசிய விடுதலை இயக்கங்கள் சர்வதேச சட்டத்தின்படி "பயங்கரவாத" இயக்கங்களல்ல!

- பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

### சென்ற வாரத் தொடர்ச்சி

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் உருவாக்கப்பட்ட கருததொற்று மையாதெனில், பயங்கரவாதத்துக்கு ஒரு வரைவிலக்கணம் உருவாக்கும் முயற்சியைக் கைவிடுவதாகும். அதற்குப் பதிலாக அந்தப் பிரச்சினையைக் கையாள்வது அதுவும் சமாதான வழிகளில் கையாள்வது என்பதாகும்.

விமானக்கடத்தலை நிறுத்த வேண்டும் என்றால், அதற்கு எதிரான Hague, Tokyo, Montreal மரபுகள் இருக்கின்றன.

இராச தந்திரிகளுக்கு எதிரான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும் என்றால், அதற்குரிய சிறப்பு மரபு, New York மரபு இருக்கிறது. அவ்வாறே, அரசுத் தலைவர்களுக்கும் இம்மரபு பாதுகாப்பளிக்கிறது.

அஞ்சல் குண்டுகளைத் தடுக்க வேண்டும் என்றால், அஞ்சல் குண்டுகளுக்கென பிரத்தியேக மரபு ஏற்படுத்தப்படவேண்டும்.

கூலிப்படையையிட்டு (Mercenaries) அது பெரிய பிரச்சினையாவுள்ளது. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், அதற்கெதிரான மரபை உருவாக்க வேண்டும்.

பணயக் கைதுகளை தடை செய்ய வேண்டும் என்றால், பணயக்கைது பயங்கரவாதச் செயல் என்று முத்திரை குத்த முயலாமல் அது சம்பந்தமான பணயக் கைதிகள் மரபொன்றினை 1979 இல் உருவாக்கினார்கள். எனது நூலின் இந்த அதிகாரம் இது தொடர்பான நடவடிக்கைகள், பேச்சுவார்த்தைகள் மற்றும் விட்டுக்கொடுப்புக்கள் பற்றிய முழுவரலாற்றையும் கூறுகிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு 'தேசிய விடுதலை இயக்கங்கள்', யுத்த சம்பந்தமான சட்டங்கள் மற்றும் வழமைகள் இவற்றின்படி கட்டுப்படுத்தப்படும். இந்த சட்டங்கள், வழமைகள், பணயக்கைதுகள் மரபு, விதி 12 இல் காணப்படும். இன்று காலை பேராசிரியர் Quigley இங்கு சாட்சியம் அளித்தவாறு பணயக்கைதுகள் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பணயக்கைதுகள் நடந்தால், அதில் ஈடுபட்டோருக்கெதிராக 'பணயக் கைதிகள் மரபு'க்கு இணங்க வழக்குத் தாக்கல் செய்யப்படும். ஆனால், தேசிய விடுதலை இயக்கம், தேசிய விடுதலை உறுப்பினர்கள் மீது இப்படியான வழக்குகள் தாக்கல் செய்யப்பட மாட்டாது. தேசிய விடுதலை இயக்கங்கள், உறுப்பினர்கள் இவ்விதக் குற்றங்களை இழைக்கும்போது அல்லது சட்டங்கள், வழக்குகளுக்கு எதிராக நடந்துகொள்ளும்போது, அவர்கள் மீது போர்க் குற்றங்களுக்காக வழக்குத் தொடரப்படும். இதற்கான காரணம் என்னவென்றால், பெரும்பாலான இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா மற்றும் சமவுடமை நாடுகள் தேசிய விடுதலை இயக்கங்கள், பயங்கரவாத இயக்கம் என்றோ, அல்லது அப்படி அழைக்கப்படுவதையோ அல்லது பயங்கரவாதச் செயலை இழைக்கும் இயக்கம் என்றோ கருதப்படும் எண்ணத்தோடு ஒத்துப்போக மறுத்ததாகும்.

எனவே, இது பயங்கரவாதத்தை அலட்சியப் படுத்துவதென்றோ அல்லது மன்னிப்பதென்றோ பொருளல்ல. மாறாக பயங்கரவாதம் என்றால், அதன் வரைவிலக்கணம் என்ன என்பதை வரையறை செய்ய முடியாதென்பதாகும். இன்று காணப்படும் சர்வதேச கருத்தொருமைப்பாடு யாதெனில், தேசிய விடுதலை இயக்கங்கள் ஜெனிவா மரபுகள், ஒப்பந்தம் இவற்றின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்பதாகும்.

1987 இல் என நம்புகிறேன், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை பயங்கரவாதம் பற்றி வேறொரு தீர்மானத்தை நிறைவேற்றியது. 'பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் வகுப்பது உபயோகமாக இருக்கும்' என பொதுச்சபை கருதியது.

இருந்தும் இன்றுவரை இந்த வேற்றுமைகள், போக்குகள் காரணமாக பயங்கரவாதத்துக்குரிய வரைவிலக்கணம் வரையறை செய்யப்படவில்லை. ஆனால் விட்டுக் கொடுப்பதன் மூலம் காணப்பட்ட இணக்கம் என்னவென்றால், தேசிய விடுதலை இயக்கங்களை ஜெனிவா மரபுகள் ஒப்பந்தம் கட்டுப்படுத்தும் என்றும், அவற்றின் அடிப்படையிலேயே தேசிய விடுதலை இயக்கங்கள் கணிக்கப்படும் என்பதாகும்.

> **கனடா, தேசிய விடுதலை இயக்கங்கள் ஜெனிவா மரபுகள், ஒப்பந்தங்கள் இவற்றின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்படும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது**

எனவே எனது எண்ணப்படி, 'பயங்கரவாதம்' என்ற பதத்திற்கு சர்வதேச சட்டப்படி பொதுவாக யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரைவிலக்கணம் இல்லை என்பதாகும். இதுவே சட்ட ரீதியாக சொல்லக் கூடிய சரியான கூற்றாகும். அதற்கான காரணங்களை நான் ஏற்கனவே கூறிவிட்டேன். ஆனால் விட்டுக்கொடுப்பின் அடிப்படையில் மெத்த நல்லது, நாங்கள் இந்த பிரச்சினை பற்றி ஆக்கபூர்வமாகச் செயல்படுவோம். நான் சொன்னவாறு கனடாவும் இந்த ஒப்பந்தத்துக்கு உடன்பட்ட கட்சியாகும். அதாவது கனடா தேசிய விடுதலை இயக்கங்கள், ஜெனிவா மரபுகள், ஒப்பந்தங்கள் இவற்றின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்படும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது.

கேள்வி: உங்களுடைய நூலை வாசித்ததின் பேரில், கனடா உண்மையில் பணயக் கைதுகள் சம்பந்தமான ஐக்கிய நாடுகள் குழுவில் அங்கம் வகித்துள்ளது?

பதில்: நான் அப்படித்தான் நம்புகிறேன். தேசிய விடுதலை இயக்கங்கள் ஜெனிவா மரபுகள், ஒப்பந்தங்கள் இவற்றின் பிரகாரம் நடத்தப்பட வேண்டும் என்பதே விட்டுக் கொடுப்பின் அடிப்படையில் காணப்பட்ட இணக்கமாகும். எனது நூல் இது பற்றிய முழு வரலாற்றையும் தெரியப்படுத்துகிறது. ஏன் அந்த விட்டுக்கொடுப்பு செய்யப்பட்டதென்றும், அதற்கான காரணிகள் எவை என்பதையும் சொல்கிறது. அடிப்படையில் நான் இப்போது உங்களுக்குச் சொன்ன காரணிகளே அவையாகும்.

கேள்வி: இப்போது உங்கள் நூலின் 149 ஆம் பக்கத்தில் இப்படி எழுதியிருக்கிறீர்கள். "மாநாட்டில் இரண்டு மாறுபட்ட கருத்துக்களில், மாநாட்டுக் குழு, ஆயுத மோதலின்போது நடைபெறுகிற பணயக் கைது சம்பந்தமாக வரையப்பட்ட மாதிரி பணயக்கைது மரபைத் தவிர்க்கும் தீர்மான வாசகத்தையே ஏற்றுக்கொண்டது. இதன் அர்த்தம் என்னவென்றால், மூன்றாவது நாடுகளின் கருத்து இந்த விடயத்தில் வலிவுடையதாக இருந்தது."

மேலும் நீங்கள் எழுதியிருப்பதாவது,

"முதலாவது உலக நாடுகள் யோசனை சொல்லியவாறு, பணயக்கைதுகள் மரபு வரைவு, ஜெனிவா மரபுகள் மற்றும் ஒப்பந்தங்கள் இவற்றோடு சேர்க்கப்பட மாட்டாது. அப்படிச் சேர்த்தால் பணயக் கைதிகள் பணயம் செய்யப்படுவது, இரண்டு மரபுகளுக்கும் உட்படுத்தப்பட்டதாகிவிடும்"

ஆனபடியால் இதை விளக்குங்கள். அதாவது இந்த இரண்டு நோக்கங்களுக்கும் இடையிலான வித்தியாசங்களைச் சொல்லுங்கள்.

பதில்: நான் சொல்லியவாறு, ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற முதலாவது உலக நாடுகளுக்கும் மூன்றாவது உலக நாடுகளுக்கும் இடையில் கோட்பாடு சம்பந்தமாகப் பிளவு இருந்தது.

கேள்வி: ஜேர்மன் நாடு இதில் சேர்மதி இல்லை என்று நினைக்கிறேன். ஜேர்மனி......

பதில்: நீங்கள் சொல்வது சரி. எல்லா ஐரோப்பிய நாடுகளும் அப்படியில்லை. நான் நினைக்கிறேன், ஜேர்மனி மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் மூன்றாவது உலக நாடுகளின் நிலைப்பாட்டுக்கு அனுதாபமாக இருந்தன.

முதலாவது உலக நாடுகள், தேசிய விடுதலை இயக்கங்கள் பணயக்கைதிகளை பணயம் எடுப்பதை, அப்படியான செயல் பாடுகளை பொதுக்குற்றம் அல்லது பயங்கரவாதம் என அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொண்டன. முதலாவது உலக நாடுகளைச் சேர்ந்த பல நாடுகள் (எல்லாம் அல்ல), தேசிய விடுதலை இயக்கங்கள் மோதலில் ஈடுபடும்போது அதனைப் பொதுக் குற்றம் அல்லது பயங்கரவாதம் எனக் கொள்ளவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. இந்த நிலைப்பாட்டை அந்த நேரத்தில் மூன்றாவது உலக நாடுகளும், சமவுடமை நாடுகளும் ஒத்துக் கொள்ள மறுத்துவிட்டன.

இப்படிச் சொல்வதால் அந்த நாடுகள் பயங்கரவாதச் செயற்பாட்டை ஏற்றுக் கொள்கின்றன என்று அர்த்தம் இல்லை. அந்த நாடுகள் எதைச் சொல்லியதென்றால் இது பயங்கரவாதம் அல்ல. இது பொதுக்குற்றம் அல்ல. இவை போர்க் குற்றங்களாகும். இவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும் என்றால் அது போர்ச் சட்டங்கள், மரபுகள் இவற்றின் அடிப் படையில் இருக்க வேண்டும். அதாவது தவிர்த்தல்வழி, சேர்த்தல் வழி அல்ல (Supplementary approach). முதலாவது உலக நாடுகள் இரண்டு வழிகளையும் அங்கீகரிக்க வேண்டும் என்று விவாதித் திருந்தால் மாநாடே நடைபெறாது போயிருக்கும். காரணம் மூன்றாவது உலக நாடுகள் தேசிய விடுதலை இயக்கங்கள், பொதுக்குற்றம் அல்லது பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்றன என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கவில்லை. ஆனால் அந்த நாடுகள், தேசிய விடுதலை இயக்கங்கள் போர்க்குற்றங்களை இழைக்க முடியும் என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருந்தன.

கேள்வி: ஆக இதன் பெறுபேறு என்னவென்றால், பணயக்கைதிகளைப் பணயம் எடுப்பதற்கு எதிராக ஐ. நாடுகள் பொதுச் சபை நிறைவேற்றிய மரபு?

பதில்: அத்தோடு இந்த மரபை ஐக்கிய அமெரிக்கா ஏற்றுக்கொண்டது உறுதிப்படுத் தப்பட்டதாகும். நான் நினைக்கிறேன் கனடா உட்பட 100 நாடுகளுக்கு மேலாக இந்த பணயக்கைதிகள் மரபை ஏற்றுக்கொண் டுள்ளன. இந்த விட்டுக்கொடுப்பு, நான் கூறியவாறு தற்போது நடைமுறையிலுள்ள சர்வதேச கருத்தொருமைப்பாடாகும். ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரச்சினையையிட்டு செய்த, கூடிய அளவு முயற்சி இதுவாகும்.

கேள்வி: ஆக உங்கள் கூற்றுப்படி ஐக்கிய நாடுகள் இந்த சர்வதேச மாநாட்டில் எடுத்த முடிவின்படி, "தேசிய விடுதலை இயக்கங்கள் பயங்கரவாத இயக்கங்களல்ல. அவை பொதுக்குற்றவாளிகளுமல்ல?"

பதில்: நீங்கள் சொல்வது சரி. பேராசிரியர் Quigley இன்று காலை சொல்லியவாறு தேசிய விடுதலை இயக்கங்கள், ஒப்பந்தம் ஒன்றின் விதி ஒன்று, பந்தி 4இல் சொல்லப்படும் வரைவிலக்கணத்தைப் பூர்த்தி செய்கின்றன என எடுத்துக்கொண்டால், பந்தி 4இல் சொல்லப்படுவது அதற்கு முந்திய பந்திகளில், ஆயுதப்போராட்டங்கள் உட்பட மற்றயவையாகும்.

அதன் அர்த்தம் என்னவென்றால், ஜெனிவா மரபுகள் ஒப்பந்தங்களுக்கு அமைய, ஒரு தேசிய விடுதலை இயக்கம் சர்வதேச ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ளது என்பதாகும்.

தேசிய விடுதலை இயக்கங்கள் ஈடுபடவில்லை.... அவை பயங்கரவாத இயக்கமல்ல. அவை பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

நீதிபதி: ஐயா, உங்களை நான் இடைமறிக்கட்டுமா?

சாட்சி: ஆம் ஐயா.....

நீதிபதி: நான் இதுவரை கேட்டதிலிருந்து, பயங்கரவாத இயக்கம் என்ற ஒரு அமைப்பு இருக்க முடியாது. ஏனென்றால் 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கு ஐ. நாடுகள் அல்லது அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் வரைவிலக்கணம் வகுக்கவில்லை.

சாட்சி: கனம் நீதிபதி அவர்களே! 'பயங்கரவாதம்' பற்றி சில அரசுகள் தங்களது சொந்த வரைவிலக்கணத்தை வைத்திருக்கின்றன. உதாரணத்துக்குச் சொல்ல வேண்டும் என்றால், ஐ. அமெரிக்க அரசு சொந்தமாக 'பயங்கரவாதம்' என்றால் என்ன என்ற வரைவிலக்கணைத்தை தனது நாட்டுச் சட்டத்தில் வரையறை செய்துள்ளது. இன்னும் சொல்லப்போனால், 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் உருவாக்க அமைக்கப்பட்ட பாராளுமன்ற சட்டக்குழுவுக்கு நான் ஒரு ஆலோசகனாகக் கடமையாற்றும்படி கேட்கப்பட்டேன்.

நீதிபதி: இப்போது நீங்கள் பேசும்போது தேசிய.....

சாட்சி: மன்னிக்கவும். நான் உங்கள் கேள்விக்குரிய விடையை முடிக்க விரும்புகிறேன்.

நீதிபதி: மன்னிக்கவும். சரி தொடருங்கள்.

சாட்சி: ஐக்கிய அரசுகள் சட்டத்தில் பயங்கரவாதத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட வரை விலக்கணம் இருக்கிறது. ஆனால், இங்கு எனது சாட்சியம் யாதெனில், "சர்வதேசச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் இல்லை. அது மட்டுமல்ல, சர்வதேச சட்டத்தின் கீழ் 'தேசிய விடுதலை இயக்கங்கள்' பயங்கரவாத இயக்கங்களாக கணிக்கப்படுவதில்லை.

கனம் நீதிபதி அவர்களே! அவர்கள் உரிமை படைத்த போராளிகளாக, ஆயுதங்களை உபயோகிக்க உரித்துடையவர்களாக கணிக்கப்படுவர். ஆனால், இந்த உரிமைகள் யுத்த சட்டங்கள் வழமைகளுக்கு அடங்குபவையாக இருக்க வேண்டும்.

உதாரணத்துக்கு, Oklahoma Courthouseஐ வெடிகுண்டு வைத்து தகர்த்தது, சுத்தமாக ஒரு பயங்கரவாத நடவடிக்கையாகும்.

இதில் சம்பந்தப்பட்ட நபர்கள், ஐக்கிய அரசினது சட்டப்படி அப்படியான பயங்கரவாதத்தில்.....

(தொடரும்....)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஒன்பது

(தொடர்ச்சி)

**மா**ர்க் வாடகைக்குப் பெற்றுக்கொண்ட காரை றோட்டிலிருந்து விலக்கி பாதையருகில் நிறுத்தினான். கைரேனியாவுக்கு மேலேயிருந்த உயர்ந்த மலைப்பிரதேசத்தில் பயணம் செய்துவிட்டு வந்திருந்தான். அவர்களுக்கு முன்னால் கரடுமுரடான ஒரு பிரமாண்டமான குன்று ஒன்று சிகரம் போல் உயர்ந்திருந்தது.

இந்தச் சிகரத்திலேதான் புனித கிலேரியன் கோட்டையின் சிதைவுகள் காணப்பட்டன. அது பாதி அழிந்திருந்த நிலையில்கூட, ஜெர்மானிய (GOTHIC) சம்ராஜ்யத்தின் பலத்தையும், மகிமையையும், இன்னும் பறைசாற்றி நிற்கும் ஒரு தேவதையின் கோட்டை வாசஸ்தலம் போன்ற ஒரு கோட்டையாகும்.

மார்க், கிற்றியின் கையைப்பிடித்து வெளியினூடாக சிகரத்தை நோக்கிய ழைத்துச் சென்றான். அவர்கள் கொத்தளங்கள்மீது, கோட்டையின் கீழ்ச் சுவர்களை அடையும்வரை ஏறிச்சென்று, அங்கிருந்து கோட்டையின் உள்நிலப பகுதிகளைப் பார்வையிட்டனர். அவர்கள் ராஜ வாசஸ்தலங்கள், பெரிய மண்டபங்கள், குதிரை லாயங்கள், ஆச்சிரமம், மேலதிக பாதுகாப்பிடங்கள் போன்றவற்றைப் பார்த்தபடி சென்றனர். அங்கு மரண அமைதி நிலவினாலும், அந் நிலங்கள் உயிர்த்துடிப்போடு இருப்பது போலிருந்தது. கடந்த காலத்தில் அங்கிருந்து மடிந்தவர்களின் ஆவிகள், காதல், போர் வெறுப்பு, சதியாலோசனைகள் போன்றவற்றால் நிரம்பிய இன்னொரு நாளைப்பற்றி முணுமுணுப்பதை உணரக்கூடியது போலிருந்தது.

ஒரு மணித்தியாலம் வரை மார்க்கும், கிற்றியும் சிகரத்தின்மீது உச்சியை நோக்கி ஏறினர். கடைசியாக வியர்த்தோட மூச்சிரைத்தபடி உச்சியின் மீதே ஏறி கீழே விரிந்து, பரந்து கிடந்த மனோரம்மியமான

**லியோன் யூறிஸ்**

காட்சிகளை ரசித்தபடி நின்றனர். அவர்கள் பாதங்களின் கீழிருந்து கைரேனியாவை நோக்கிக் கிட்டத்தட்ட மூவாயிரம் அடிவரை செங்குத்தாக இறங்கிய ஒரு குன்று இருந்தது. தொலை தூர அடிவானத்திலே துருக்கியின் கரைகள் தெரிந்தன. இடதுபக்கமும், வலதுபக்கமும் பசுமையான பச்சை வர்ணத்தை விசிறி அடித்திருந்த காடுகளும், படிப்படியாக வெட்டிப் பயிர்செய்யப்பட்டிருந்த திராட்சைச் செடிகளும், மலையருகோரங்களில் ஒட்டிக் கொண்டிருந்த அழகிய வீடுகளுமாக ரம்மியமாகக் காட்சியளித்தன. கீழே ஒலிவ் மரக்காடுகளூடாக வீசிச் சென்ற இளங்காற்று அவற்றின் இலைகளை மினுமினுக்கும் வெள்ளி வர்ணமாக அடித்திருந்தது.

கிற்றியின் பின்பக்கத்தே ஒரு மேகக்கூட்டம் சென்றபோது, வானம் அளித்த பின்புலத்தில் நிழல்போல் தெரிந்ததை மார்க் ரசித்தான். அவள் எவ்வளவு எழிலாகத் தோற்றமளிக்கிறாள் என்று அவன் நினைத்தான். அவனது உலகத்தில் கிற்றி பிறமென்ற் ஒரு வித்தியாசமான பெண்தான். அவளை அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பம் அவனுள் இருக்கவில்லை. மார்க் பார்க்கருக்கு மரியாதை தேவையிருக்கவில்லை. ஆனால் கிற்றிக்கு கௌரவமளிக்க அவன் விரும்பினான். எல்லாவற்றையும்விட, அவளுடன் மட்டுமே அவன் மனம்விட்டுப் பழகக்கூடியதாயிருந்தது. ஏனெனில், அவர்களுக்கிடையில், எதுவித பாசாங்குகளோ, ஒருவரில் ஒருவர் நல்லபிப்பிராயம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய தேவையோ, எதுவித கண்ணாமூச்சி விளையாட்டுக்கள் விளையாட வேண்டிய தேவையோ இருக்கவில்லை.

மேலும் ஒரு மணிநேரம் வரை அங்கிருந்தனர். இருட்டுவதற்கு முன் கீழிறங்கிவிட வேண்டும் என்பதால், மனமின்றியே, மெதுவாக உச்சியிலிருந்து கீழிறங்கி வந்தனர்.

கிற்றியும், மார்க்கும் ஹோட்டலுக்குத் திரும்பிய அதே நேரத்தில், மண்ட்றியா, அரியோடு காரில் வந்து கைரே னியாவுக்குள் நுழைந்து துறை முகத்துக்கு வந்து கடலோர மேடையொன்றில் காரை நிறுத்தினான். அவர் காரிலிருந்து இறங்கி அரியுடன் படகுகள் கட்டுமிடத்துக்குச் சென்றான். கடலின் ஓரத்தில் எழுந்து நின்ற வேர்ஜின் கோட்டை (Virgin Castle) கோபுரங்களை நோக்கி, துறைமுகத்தின் குறுக்காகப் பார்வையைச் செலுத்தினான் அரி. அவர்கள் துறைமுகத்தைக் கடந்து கோட்டைக் கோபுரங்களுள் ஏறினார்கள். அங்கிருந்து, சூழ இருந்த பிரதேசங்களை நன்றாகப் பார்க்கக்கூடி யதாக இருந்தது. அரி வழமையான தனது மௌனத்துடன் அந்த இடங்களைப் பார்த்தான்.

அந்தத் துறைமுகத்துக்கு இரண்டு கடற் சுவர்கள் இருந்தன. ஒன்று இப்போது அவன் நின்றிருந்த கோட்டை கோபுரத்திலிருந்து சென்றது. அவனுக் கெதிராக கடலோர மேடையை அண்டிய வீடுகள் இருந்தன. அங்கிருந்து மற்றைய கடற் சுவர் சென்றது. இடதுபக்க வலதுபக்கச் சுவர்கள், ஒன்றை ஒன்று தொடுமாப் போலான இரண்டாவது வட்டத்தை அமைத்திருந்தன. ஒரு சிறிய இடைவெளி மட்டும் இருந்தது. இதுவே துறைமுகத்துக்குள் பிரவேசிக்கும் வழியாகப் பயன்பட்டது. துறைமுகத்தின் உட்பகுதி சிறியதாகச் சில நூறு யார்கள் விட்டத்தைக் கொண்டும் அமைந் திருந்தது. சிறிய படகுகள் அங்கே நிறைந்திருந்தன.

"இந்த இடத்தில் அப்ரோடைற்றைத் துறைமுகத்துள் கொண்டுவரமுடியும் என்று நீ நினைக்கிறாயா?"

"உள்ளே கொண்டுவருவது பிரச்சினை யில்லை. ஆனால் வந்தபின் கப்பலைத் திருப்பியெடுத்து வெளியே கொண்டு போவதுதான் சிரமம்."

காரை நோக்கி இருவரும் திரும்பிவந்தபோது அரி மௌனமாகச் சிந்தனையில் மூழ்கியிருந்தான். கண்கள் சிறிய துறைமுகத்தில் பதிந்திருந்தன. அவர்கள் காரை அடைந்தபோது இருள் கவியத் தொடங்கியிருந்தது.

"நீ தனியாகவே பாமாகுஸ்ராவுக்குத் திரும்பிப் போ" என்ற அரி தொடர்ந்து விளக்கமளித்தான். "நான் இங்கு டோம் ஹோட்டலில் ஒருவரைச் சந்திக்க வேண்டும். எவ்வளவு நேரமெடுக்குமோ தெரியாது. நான் எப்படியாவது பாமாகுஸ்ராவுக்கு வருகிறேன்."

முன்பென்றால் மண்ட்றியா இப்படித் திடுதிப்பென ஒரு ரக்சிச் சாரதியைப்போல் விடுவித்து அனுப்புவது பற்றி மனம் வருந்தியிருப்பான். ஆனால் இப்போது அவனுக்குப் பென்கானானிடமிருந்து கட்டளைகளை ஏற்றுக் கொள்வது பழகிப்போயிருந்தது. அவன் காரின் சாவியைத் துவாரத்துள் செலுத்தி காரை இயக்கத் தொடங்கினான்.

"மண்ட்றியா நீ மிகவும் உதவியாக இருந்தாய். மிக்க நன்றி" சொல்லிவிட்டு அரி திரும்பி நடக்கத் தொடங்கினான். மண்ட்றியா நிறைவாகப் புன்னகைத்தான். முதன்முதலாக, அதுவரையில் பென்கானா னிடமிருந்து வெளிப்பட்ட அன்பான சொற்கள் இவையென்பதால் மண்ட்றியா வியப்போடு மனம் குளிர்ந்தான்.

பிரிட்டிஸ் குரல்கள், கிலுங்கும் கிளாஸ்களின் ஓசைகள், மெதுவாக வெளியே முணுமுணுத்துக் கொண்டிருந்த கடல் ஆகியவற்றின் கலவைக்கு மேலாக, மென்மையான ஸ்ரோஸ் (Strauss – சிறந்த ஜேர்மனிய இசை வல்லுனர்)இன் இசையமைப்பிலான நடன இசை (Waltz) பரவிக் கொண்டிருந்தது. மார்க் தான் குடித்த கோப்பிக் கோப்பையைக் கீழே வைத்து, கை லேஞ்சியால் வாயைத் துடைத்தவிட்டபடி, கிற்றியின் தோள்களுக்கு மேலால் அப்போதுதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்த அவ்வுருவத்தைக் குறுகுறிப்பாகப் பார்த்தான். அந்த உயரமான மனிதன் தலைமைப் பரிவாரகனிடம் ஏதோ காதில் சொல்ல, அவன் மார்க் இருந்த மேசையைச் சுட்டிக் காட்டினான். அரிபென் கானானை அடையாளம் கண்டு கொண்டதும் மார்க் வியப்புற்றான்.

"மார்க் நீ ஒரு ஆவியைக் கண்டவன் போல் இருக்கிறாய்" என்றாள் கிற்றி:

"ஆமாம். ஒரு ஆவியைத்தான் கண்டேன். இதோ வருகிறது. இந்த மாலை வேளை நல்ல சுவாரசியமாகக் கழியப்போகிறது" என்றான்.

# தாயகம் நோக்கிய பயணம்

அவர்கள் அங்கிருந்த பெரும் பாறையொன்றில் அமர்ந்தபடி தங்களைச் சுற்றி இயற்கை அள்ளி வீசியிருந்த மனோகரமான காட்சிகளில் மனதைப் பறிகொடுத்திருந்தனர். கோட்டை, கடல், வானம், மலைகள் எல்லாமே மிக அழகாகவிருந்தன. "இதுதான் உலகத்திலே மிக அழகான பள்ளத்தாக்கென்று நினைக்கிறேன்" என்றான் பார்க்கர் கடைசியாக. அவள் ஆமெனத் தலையசைத்தாள்.

அந்த நாட்கள் இருவருக்குமே மிக இனிமையாக இருந்தன. மார்க் வந்ததிலிருந்து கிற்றி முற்றாக மாறிப்போயிருந்தாள். மனதில் மறைத்தி ருந்தவைகளை மனம் விட்டுவெளியே சொன்னதால் ஏற்பட்ட நிம்மதியை அவள் நிறையவே அனுபவித்தாள்.

"நான் கொடூரமாக ஒரு விசயத்தைப்பற்றி நினைக்கிறேன். கேர்னல் ஹோவார்ட் ஹில்லிங்சை பலஸ்தீனத்துக்கு அனுப் பியது பற்றி, எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியைப்பற்றி நினைக்கிறேன்; நீ எனக்காக மட்டும் இங்கிருக்கிறதை நினைக்கிறேன். மார்க் நீ இன்னும் எவ்வளவு நாள் நிற்கலாம்?"

"சில வாரங்கள். நீ விரும்பும்வரை."

"இன்னொரு முறை நாம் ஒருவரிலிருந்து ஒருவர் வெகுதூரத்திலிருப்பதை விரும்ப வில்லை."

"கிற்றி, ஒரு விசயம் தெரியுமா, டோம் ஹோட்டலில் எல்லாரும் நாம் ஒன்று சேர்ந்துவிட்டதாக நினைக்கிறார்கள்."

"நல்லது. இன்றிரவு நான் எனது கதவில், நான் மார்க் பார்க்கரை மிகவும் காதலிக்கிறேன் என்று பெரிய சிவப்பு எழுத்துக்களில் அறிவித்தலொன்று எழுதித் தொங்கவிடுகிறேன்."

கிற்றி பார்ப்பதற்காகத் திரும்பியபோது, அரிபென் கானான் ஏற்கனவே மேசையின் அருகில் உயரமாகத் தெரிந்தான்.

"நீ என்னை மறக்கவில்லை என்று தெரிகிறது பார்க்கர்." அழைப்பில்லாமலே ஒரு கதிரையில் அமர்ந்துகொண்ட அரி, கிற்றியை நோக்கி, "நீங்கள்தான் கிற்றி பிறமென்றாக இருக்கவேண்டும் அல்லவா?"

அரியுடையவும், கிற்றியுடையவும் கண்கள் ஒன்றையொன்று நேராகச் சந்தித்து சிலகணங்கள் அப்படியே உறைந்து போயின.

மௌனமாகச் சிலவினாடிகளுக்குப் பிறகு, அரி சூழவரப் பார்த்துப் பணியாளன் ஒருவனை அழைத்து 'சான்ட்விச்' கொண்டுவரப் பணித்தான். "இது அரிபென் கானான். என்னுடைய பழைய நண்பனொருவன்" என்ற மார்க், அரியிடம், "உனக்கு கிற்றி பிறமென்றைத் தெரிந்திருக்கிறது அல்லவா?" என்றான்.

"அரிபென் கானான் எப்படியான விசித்திரமான பெயர்" என்றாள் கிற்றி.

"அது எபிரேய (Hebrew) மொழியிலி ருக்கிறது, திருமதி பிறமென்ற். அதற்குக் கானானின் மகனான சிங்கம். (Ari-சிங்கம், Ben–மகன்) எனக் கருத்து" என்றான் அரி.

"அது சிறிது குழப்பமாக இருக்கிறது".

"மாறாக, ஹீப்ரூ ஒரு தர்க்க ரீதியிலான மொழியாகும்."

"சரிதான், ஆனால் எனக்கப்படித் தெரியவில்லை" என்றாள் கிற்றி. சிறிது கேலி தொனிக்க.

தொடர்ச்சி 13ம் பக்கம்...

www.tamilarangam.net



# முல்லைத்தீவு எங்கள் முதிசம்

முல்லைத்தீவு - எங்கள் முதிசம்!
'முத்தும்' அள்ளித்தரும் நெய்தல்!
மூன்று வேளை வழங்கிடும் மருதம்!
தொப்புள் கொடியாகி -
வடக்கிற்கும் கிழக்கிற்கும் பாச ஊற்றாகி -
பருவ மழை தந்து காத்திடும் அன்னை!

நேற்று வந்தனர் சிலர்
ஆற்று வெளிகளில் ஆங்காங்கு அமர்ந்தனர்.
குஞ்சுகளாகி கூட்டம் பெருக்கினர்.
வஞ்சகர் - இவர் வாயினிக்கப் பேசினர்.
குந்த ஒரு குடிநிலம் என்று கூறி
வந்தமர்ந்து. எங்கள் வாசலை மொய்த்தனர்.
மீன்பாடும் தேன் நாடு - திருக்
கோணமலை. மன்னார்.
வன்னி நிலம். முல்லை
எங்கள் கொப்பாட்டனின் கொப்பாட்டன்
இருந்த இடம் எல்லாம்
இவர்களிடம்
இரையாகிப் போயினவே!

மாற்றானை நாமோ
தோழன் என்றெண்ணினம்.
கூற்றுவன் ஆகினன்- எங்கள்
நெஞ்சைப்பிளந்திடக் கோடரி தூக்கினன்.
பிஞ்சுகளைத் தீயிட் டெரித்தனன்.
வஞ்சியரைப் பால்வதை செய்தனன்.
தமிழரை
வேரொடு சாய்த்திடத் துணிந்தனன்.

மாற்றான் படைகள் ஊரினுள் புகுந்தன
மனைகள். வயல்கள் காடாய் எரிந்தன
எறிகணை வெடித்தது
எங்கும்
இரத்தம் பாய்ந்தது.
தாயக மடியோ - அதில்
சகதியாய்க் கிடந்தது.
எத்தனை குழந்தைகள் அநாதைகளாயினர்?
எத்தனை தங்கைகள் விதவைகளாயினர்?
பெற்றவர் உயிரோ போகத் துடிக்கையில்
அருகில்
பிள்ளையின் ஜீவன் அணைக்கத் துடித்தது.
உயிரற்ற தாயிடம் பாலுக்கு ஏங்கிய
கொடுமை
எங்கள் பூமியில் நிகழ்ந்தது.

வலிகாமத்தில் ஆரம்பித்து
கிளாலிவரை துரத்தி வந்தான்.
வலையெறிந்து பிடித்து
கைதியாய் ஆக்கிவிட்டான்.
புலிகளிடமிருந்து எம்மை
மீட்டுவிட்டோம் என்றுரைத்தான்.
அவர்களை காட்டுக்குள்
துரத்திவிட்டோம் என்றான்.
வெடி கொளுத்திக் கொண்டாடினான்.
யாழ் பாடிப் பெற்ற விருது! - அதை
யாப்பபட்டுணவாய் ஆக்கிச் சொன்னான்.

இனியென்ன
மீண்டும் ஒரு இனிய வாழ்க்கை.
அந்தக்கால அனுபவங்கள்
கரும்பாய் அவனுக்கு இனித்தன.
அடக்குமுறையாளன் -
அறுபத்தொன்றில் வந்தவன் -
'கள்ளத்தோணி தடுப்பு' என்று
காரணம் வேறு சொல்லிக்கொண்டு
கூடாரம் போட்டுக் குந்தியவன்!
அந்தக்காலத்தில்.........
அத்தைக்கத்தை கையலம்பி
'திண்டு. குடிச்சு' களிப்புற்று இருந்ததுபோல்
கறுத்தக்கொழும்பானும்.
கதலிப்பழக்குலையும்.........
வறுத்த அரிசிப்புட்டோடு. மாசிச்
சம்பலும்.........
குடும்பத்துடன் உண்டு மகிழ்ந்திடலாம்.
காலாற ஒரு நடை வசாவிளான்
சந்திவரை.........
காற்றுவாங்க......... பலாலிச் சந்திவரை..........
தொடைநடுங்கும் கிலியொன்று
உள்ளுக்குள் அடித்தாலும்.........
பழையதை நினைக்கையிலே
பூரிப்பால் நிறைந்திருந்தான்.

பூகம்பம் ஒன்று..........
முல்லையில் அதிர்ந்தது.
மீண்டும் மீண்டும் புதிதாய் பிறப்பவர்
தீயினுள் புகுந்து தேசம் மீட்பவர்
நிமிர்ந்து ஒருகணம் மூச்சிட்டு எழுந்தனர்
நெறிமுறை தவறா தலைவனின் பின்னே
நடந்தனர்.........
காற்றும். கடலும். வானும் போற்றிடும்
புண்ணிய யுத்தம் தொடர்ந்தனர்
ஆற்றலின் கரங்கள் ஆயுதம் பறித்தன
போரதில் எதிரியின் உடல்கள் பொசுங்கின.
மூர்க்கமாய் வெஞ்சமர் ஆடிய புலியிடம்
அஞ்சியே பறந்தனர்.
சிலர் கும்பிடு போட்டனர்.
மேலை ஊரிலே இரந்து சேர்த்தவை -
கை நழுவிப் போயின.

வீரம் விளைநிலம் - முல்லையில்
எங்கள் புதல்வர்கள்
வீர காவியம் எழுதினர்.

யாழ்ப்பாணம் வெற்றி கொண்ட
களிப்பு மிகுதியிலே
மறந்திருந்த காதலையும்
மறுமலர்ச்சி செய்தாராம்.
வேங்கைகள் பதுங்கின!
தூங்குவதாய் நினைத்தார்
மாமா - தளபதியார்!
'ஓயாத அலை' யிடம்
அவர்.
அள்ளிக் கொடுத்தது எவ்வளவு?
'சரணம்' கேட்டது எத்தனை?
கிலியுடன் மறைந்தது எத்தனை?
ரத்வத்தை மேசையில்..........
'புரியாத புதிர்' இவை!

முல்லைத்தீவு எங்கள் - முதிசம்! ❐

கேமராஜ் - இலண்டன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெதர்லாந்து தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் நடாத்தும்

## மாவீரர் நாள் கவிதைப் போட்டி

### மரணத்துள் தொடரும் வாழ்வு
### (கவிதைப் போட்டி)

**நிபந்தனைகளும் விதிகளும்**

- போட்டியில் எவரும் கலந்துகொள்ளலாம்.
- கவிதைகள் 200 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்
- கவிதைகள் யாவும் மரணத்துள் தொடரும் வாழ்வு என்ற தலைப்பை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்
- படைப்பாளி தன்னுடைய பெயர் முகவரி என்பவற்றை தனித்தாளில் எழுதி அது தமது ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆக்கங்களுக்கு மாவீரர் நாள் விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிக்கான முடிவுத் தகதி: **15 . 11 . 96**

கவிதைகள் அனுப்பவேண்டிய முகவரி

TAMIL KUNST EN CULTURELE ORGANISATIE
POSTBUS 343, 1740 AH SCHAGEN
தொடர்புகளுக்கு ☎ 0224 217181 , 070 3461963

தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் – நெதர்லாந்து

## மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டப் போட்டி 1996

இடம் : SPORTHAL KINHEIM
HOF LANDER WEG
BEVERWIJK
(பொலிஸ் நிலையத்திற்கு அருகில்)

காலம் : 16 . 11 . 96 சனிக்கிழமை
காலை 9.30 மணி

தமிழீழ விடுதலையே மூச்செனநினைந்து
மண்ணுக்குள் விதையான
எங்கள் மாவீரர் நினைவாக...

தமிழீழ விடுதலைப் புலிகள் (நெதர்லாந்து)

## தேசிய மாவீரர் நாள் கார்த்திகை 1996

இடம் : Albisguetli மண்டபம்
Uetliberg strasse 341
8045 Zurich

காலம் : 24 . 11 . 96 ஞாயிறு
பிற்பகல் 2.00 மணி

❄ தேசிய கொடியேற்றல்
❄ எழுச்சி உரை
❄ சிறப்புரை
❄ வெளியீட்டு விழா
❄ மௌன அஞ்சலி
❄ மாவீரர் அஞ்சலி
❄ மாவீரர் நாள் வெளியீடுகள்
❄ நாட்டிய நாடகம்
❄ எழுச்சி நடனங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் கிளை)

## தமிழீழத் தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுவிஸ் கிளை நடாத்தும் ஓவியப் போட்டி - 1996

**கீழ்ப்பிரிவு:** 01.01.1987ஆம் ஆண்டிற்குப் பின் பிறந்தோர்.
தங்கள் கற்பனையில் உதித்த எவற்றையும் வரையலாம்.
(வர்ணப் பென்சில், வர்ணப் பேனை போன்ற எவற்றையும் வர்ணம் தீட்ட உபயோகிக்கலாம்.)

**மத்திய பிரிவு:** 31.12.1986ஆம் ஆண்டிற்கும் 01.01.1982ஆம் ஆண்டிற்கும் இடையில் பிறந்தோர்.
தாயகத்தில் அல்லது புலம்பெயர்ந்த நாடுகளில் அகதிகளின் அவலம், எமது தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக வரையப்படல் வேண்டும்.
(நீர் வர்ணம் மாத்திரமே வர்ணம் தீட்ட உபயோகிக்கலாம்.)

**மேற்பிரிவு:** 31.12.1981ஆம் ஆண்டிற்கு முன் பிறந்தோர்.
எமது தேசிய விடுதலைப் போராட்டம், தாயகத்தில் மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் அகதிகள்படும் அவலங்கள், அழிவுகளைச் சித்தரிக்கும் கருத்தோவியம், நவீன ஓவியம், கேலிச் சித்திரம் போன்ற எவையாகவும் இருக்கலாம்.
(நீர் வர்ணம், எண்ணை வர்ணம் இரண்டுமே உபயோகிக்கலாம்.)

**குறிப்பு:**
–ஓவியம் வரையப்பட வேண்டிய அளவு A3 (30cm*42 cm) இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
–வரையப்படும் ஓவியங்கள் ஒன்றின் தழுவலாக இருத்தல் கூடாது.
–மூன்று பிரிவிலும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசு பெறும் ஓவியங்கள் 24–11–96 ஞாயிற்றுக்கிழமை சூரிச் நகரில் நடைபெறும் தமிழீழத் தேசிய மாவீரர் நாளில் காட்சிக்கு வைக்கப்பட்டு அவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் நிகழ்ச்சியின்போது வழங்கப்படும்.
–ஓவியம் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 11.11.96 திங்கட்கிழமை.
–ஓவியம் அனுப்ப வேண்டிய முகவரி:

T.R.O.
V. Bala, Turner Str.21, 8006 Zurich
தொடர்புகளுக்கு: 01-3622755

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - சுவிஸ் கிளை

தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதிக்காக சைவத் தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## "அற்றார் அழிபசி தீர்த்தல்"

04-01-1997 சனிக்கிழமை, Hotel Limmat, Limmat Str. 118, 8005 Zurich

**மாபெரும் நாடகப் போட்டி**

நாடகப் போட்டி பற்றிய விபரங்கள்:
-நாடகத்தின் கருவாக,
தாயகத்தில் நம் மக்கள் படும் அவலங்கள், எமது தேசத்தின் விடுதலைப் போராட்டம், புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் பேசும் மக்களும் அவைசார்ந்த மன்றங்கள் மற்றும் கோவில்கள், கழகங்கள் போன்றவை தாயகத்தில் அல்லல்படும் மக்களுக்கும் தாயக விடுதலைக்கும் ஆற்றவேண்டிய கடமைகள், புலம்பெயர்ந்த நாடுகளில் அகதியாக வாழ்வதன் அவலம் போன்றவை இடம்பெறல் வேண்டும்.
– ஒரு நாடகத்தில் குறைந்தபட்சம் 4 கலைஞர்கள் பற்கேற்க வேண்டும்.
– பங்குபற்றும் கலைஞர்களுக்கு வயதெல்லை கிடையாது.
– சுவிசில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் போட்டியில் கலந்து கொள்ளுதல் தவிர்க்கப்பட வேண்டும்.
– நாடகம் 30 நிமிடமாக இருத்தல் வேண்டும்.
– ஒரு நாடகத்திற்கான அனுமதிக் கட்டணம்: 100Sfr
– விண்ணப்ப முடிவுத் திகதி: 30–11–1996
– 30–11–1996ஆம் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
– நாடகத்திற்கான விதிமுறைகள் விண்ணப்பித்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
– தெரிவு செய்யப்பட்ட 5 நாடகங்கள் 'அற்றார் அழிபசி தீர்த்தல்' நிகழ்ச்சியின்போது மேடையேற்றப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
Saiva Thamil Sangam, Wehntaler Str. 293, 8046 Zurich
தொடர்புகளுக்கு: 089-4052209, 01-4621349, 01-3622755

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி"

## இலண்டனில் மாவீரர் நாள் - 96

மாவீரர் வாரமான 21–11–96 இலிருந்து 27–11–96 வரையிலான ஓர் நாளில் எம் இனத்தின் சுதந்திரத்திற்காகவும், கௌரவத்திற்காகவும், தம் இனிய உயிர்களை விதைத்திட்ட தமிழீழத் தேசிய வீரர்களை எழுச்சியுடன் கௌரவிக்கும், கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

காலம்: 23-11-96, சனிக்கிழமை, நேரம்: மாலை 6.00-11.00 வரை.
இடம்: Round House (மண்டபம்) 100, Chalk Farm Road. *Tube: Chalk Farm*

இந் நிகழ்வைச் சிறப்பிக்குமுகமாக,
1) இவ் எழுச்சி நாளுக்கான உதவிகளை, ஆலோசனைகளை வழங்க விரும்பின் எழுத்து வடிவில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
2) பிரித்தானியாவில் வதியும் நம் மாவீரர் குடும்பங்களை 15–11–96க்கு முன்பாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.
3) கவிதைப் போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் 10 வரிகளுக்கு உட்பட்டதும், முற்றிலும் மாவீரர்களைப் பற்றியதுமான கவிதைகளை அனுப்பி வைக்கவும். திறமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று கவிதைகளும் மாவீரர் நாள் கலை நிகழ்ச்சியில் வாசிக்கப்படும்.

- தமிழீழ விடுதலைப் புலிகள்
- பிரித்தானியக் கிளை

தொடர்புகளுக்கு: UTO. 211 Katherine RoadLondon E6 1BU. Tel: 0181 - 503 4294 / 0956 256 098

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெற்றியின் நாயகர்கள்

'ஓயாத அலைகள்' வெற்றிக்கு வித்தாகிய, வேவுப் புலி வீரர்கள் இவர்கள்! தமிழினம் மகுடம் சூடிய அந்தச் சரித்திர நிகழ்வுக்கு அடிக்கற்களாகி, அமைதியாக உறங்கும் எம் நெஞ்சினிய தோழர்கள்! யாழ்ப்பாணத்தைப் பிடித்த வெற்றிக்கு, கொழும்பில் சிங்களம் விழா எடுத்து நின்ற வேளை - உள்ளத்தில் சபதமெடுத்த தலைவனின் வேட்கையை எண்ணத்தில் சுமந்து அவர்கள் புறப்பட்டபோது - தம் உயிர்வாழ்விற்கான சாத்தியத்திற்கும் அசாத்தியத்திற்கும் ஊடாக, எம் போராட்டத்தின் புத்துயிர்ப்பையும் எம் மக்களின் புதுவாழ்வையும் தீர்மானிப்பதாய்ப் பயணம் போனார்கள். நீரோடு மிதந்து, நிலத்தோடு தவழ்ந்து, நிலவில்லா வானத்தின் கீழ் இருளோடு நகர்ந்து, தம்மையே வருத்தி வருத்தி அவர்கள் சிறுகச் சிறுகச் சேர்த்துத் தந்த வெற்றி இது. இன்று - முல்லை நகரத்தின் நடுவில் நிமிர்ந்துள்ள எம் புலிக்கொடி, அவர்களின் உயிர் கலந்த காற்றில் கம்பீரமாக அசைகிறது!



மேஜர் சேகரன் / பாலவன்
கணேஸ் திருக்குமரன் -
முல்லைத்தீவு
19.04.1973 – 31.12.1995
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு ஆரம்பித்தபோது, வட்டுவாகல் பகுதியில் படையினர் பதுங்கித் தாக்கியதில்.



கப்டன் நாவரசன்
மகாலிங்கம் கஜேந்திரன்
-வவுனியா
25.08.1973 – 19.01.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவின்போது, சிலாவத்தைப் பகுதியில் படையினர் பதுங்கித் தாக்கியதில்.



லெப். ஈழப்பிரியன்
கந்தசாமிநாதன் ஏகாம்பரநாதன்
கிளிநொச்சி
11.01.1974 – 17.06.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவின்போது, சிலாவத்தைப் பகுதியில் எறிகணை வீச்சிற்கு இலக்காகி.



கப்டன் நிலவன்
நெல்லநாதப்பிள்ளை உருத்திரமூர்த்தி
வவுனியா
21.05.1974 – 27.06.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவின்போது, வட்டுவாகல் பகுதியில் மிதிவெடியில் சிக்கியதால் சயனைட் உட்கொண்டு.



கப்டன் ஆதவன்
மகேந்திரன் பரமேஸ்வரன் -
திருமலை
14.09.1978 – 05.07.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவின் போது, வட்டுவாகல் பகுதியில் படையினர் பதுங்கி இருந்து தாக்கியதில்.



கப்டன் ராம்குமார்
சந்தனம் யோகேஸ்வரன்
வவுனியா
19.04.1972 – 18.07.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



கப்டன் கவிஞன்
தங்கவேல் ரமேஸ்வரன்
முல்லைத்தீவு
29.05.1975 – 18.07.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



கப்டன் மயூரன்
கிட்ணன் செல்வன்
யாழ்ப்பாணம்
18.04.1973 – 18.07.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



கப்டன் வேங்கையன் / வதனன்
சுப்பிரமணியம் கேதீஸ்வரன்
யாழ்ப்பாணம்
12.05.1976 – 18.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



கப்டன் முத்தமிழன்
கிருஸ்ணபிள்ளை மனோகரன்
யாழ்ப்பாணம்
19.05.1975 – 18.07.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



கப்டன் சாளமன்
கதிரிப்பிள்ளை மகேஸ்வரன்
யாழ்ப்பாணம்
07.05.1975 – 18.07.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



லெப்ரினன்ற் இசைக்கோன்
பத்மநாதன் யோகேஸ்வரன்
யாழ்ப்பாணம்
22.11.1978 – 18.07.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



மேஜர் குருசங்கர்
பழனியாண்டி மகேந்திரன்
வவுனியா
19.04.1972 – 20.07.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



மேஜர் அறிஞன் / சத்தியன்
கோபாலன் சிவகுமார்
மட்டக்களப்பு
26.07.1974 – 04.08.1996
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து – வழிகாட்டியாகவும் சென்று பின்னர், 'சத்ஜெய' படையெடுப்பிற்கு எதிரான சமரில்.

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்